சர்வதேச தமிழ்ச் சஞ்சிகை இதழ் 4 ஒகஸ்ட் 2001 ISSN 1474 - 8770

தேசம்

தாய்மாரும் குழந்தைகளும் தமது இறுதி நாட்களை எண்ணுகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசம்



அமுதன் - NL

மருத்துவ ஆய்வு

தாய்மாரைத் குழந்தைகளும் தமது இரத்தி 04
நாய்களை வென்றுகின்றனர் - *பிரதாப் சிவராஜா*
நோய்களைப் புதிய பிரதேசத்தில் நீக்க அவையில்
மேற்கொள்ளப்பட்ட ரகசிய மருத்துவ ஆய்வு.

அரசியல்

பிரித்தானியாவில் தமிழர்கள் 06
வெளிப்படாத ஓர் உண்மை - *தி ஜோதாசன்*
பிரித்தானிய தமிழர்களின் அரசியல் சமூகப்
பொருளாதாரம்.

தமிழகத்தின் தலைவிதி - *செ சிவகுருநாதன்* 07
ஜெயலலிதாவின் ஆட்சியும் திமுகவின் எதிர்காலமும்.

இலங்கையை ஆட்டிய சுதந்திரம் - 16
வேற்றுமை சுரேன்
இலங்கையில் இரண்டாம் இனப்படுகொலைகளை
நினைவு கூரும் கட்டுரை.

வைகை:

தமிழர் இலங்கைகளில் ஓர் பந்தயம் - 08
தி ஜோதாசன்
பிரித்தானியாவில் தமிழர் இல்லங்களை ஒரு வைகறை
தமிழ் தொலைக்காட்சியை.

சமூகம்

பாலையர் பதுளையைச் அன்னை - 10
அலக்ஸை இளங்கோ
பெண்களில் சமூக நிலை பற்றிய ஓர் பார்வை.

மதம்

இலங்கை அரசியலில் மதம் 11
சுகாதத்தின் கெகாலிஸ்டஸ்லஸ்
இலங்கை இனப்பிரச்சனையில் அந்நாட்டு கொள்கை
மதங்கள் எப்படி செயலாகத செய்துகொண்டிருந்தது என்பதை
ஆராயும் கட்டுரை.

சந்திப்பு

விஜயபாலன் - தேசம் 14
வடக்கிழக்குமான மனித உரிமைகளுக்குமான
விஜயபாலனுடன் ஓர் நடத்திய நேர்காணல்.

நூலகவியல்

நூல்தேட்டம் - *எஸ் சிவஞானசுந்தரம்* 18
இது ஒரு நூல் அறிமுகப் பகுதி.

சிறுகதை

காற்று வெளியிடை - *விஜய் ஆதித்தனிலன்* 21

இச் சஞ்சிகை தேசம் வெளியீட்டுக் குழுவினரால் வெளியிடப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசம்
பற்றி

பிரதம ஆசிரியர்
த ஜெயபாலன்

ஆசிரியர் குழு
என் செல்வராஜா
(எஸ்தாபகர் -
அயோத்தி நூலக
சேவைகள்)
01582703786

க இரவீந்திரன்
(அதிபர் -
இரகசியக் கலைக்
கல்லூரி)
020 8472 0376

த ஜெயபாலன்
079 0985 2418

இவ்விதழின்
எழுத்தாளர்கள்

டாக்டர்
நு சிவராஜா

விஜயபாலன்

விமல்
குழந்தைவேல்

அக்கரை
இளங்கோ

காயத்திரி
கொன்ஸ்டன்ரைன்

நெடுந்தீவு
சுரேஸ்

பொ சிவக்குமார்

சு ஸ்ரீராஜன்

என் செல்வராஜா

க இரவீந்திரன்

த ஜெயபாலன்

ஆக்கங்களிற்கு
பொறுப்பு
ஆக்கியோரே

என்ன விலை இந்த சமாதானம்

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்விற்கான சமாதான முயற்சிகள் மீண்டும் பின்னோக்கிச் சென்றிருக்கிறது. இதுவரை ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தி வந்த இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தற்போது நோர்வேயின் நடுநிலைமையை கேள்விக்கு உட்படுத்தி உள்ளன. நோர்வே தம் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதாக இலங்கை அரசு குற்றம் சாட்டுகிறது. மறுபுறம் நோர்வே தம்மிடம் கலந்து ஆலோசிக்கத் தவறுவதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டுகின்றனர். மொத்தத்தில் சமாதானம் தற்போதைக்கு சாத்தியம் இல்லை என்பது அனைவரதும் கணிப்பு.

25 ஆண்டுகால இலங்கை உள்நாட்டு யுத்தம் இரு இனங்களிடையேயும் பகைமையையும் சந்தேகத்தையும் விதைத்து உள்ளது. இதற்கு மாறி மாறி ஆட்சிக்கு வந்த பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் முக்கிய காரணமாக இருந்துள்ளனர். தமது அரசியல் நலனுக்காக இனவாதத் தீயை மூட்டி நாட்டை போர்க்களமாக்கி உள்ளனர். இவர்கள் தவறுகளை உணர்ந்து நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுவார்கள் என்பதை எந்தத் தமிழனும் ஏற்கத் தயாராயில்லை.

மறுமுனையில், இலங்கை அரசின் அரசியல் (இராணுவம் அல்ல) ஆட்டத்திற்கு போராளிகளால் ஈடுகொடுக்க முடியவில்லை. இராணுவரீதியாக வெற்றி, தோல்வி நிர்ணயிக்க முடியாத யுத்தமாக சர்வதேச இராணுவ அவதானிகள் தெரிவித்தும், கடந்த 18 ஆண்டுகளாக மோதிப்பார்த்தும் தமது பலம், பலவீனங்களை எத்தரப்பும் மதிப்பிட்டு பிரச்சனைக்குத் தீர்வு காண முன்வரவில்லை.

கடந்த 18 ஆண்டுகால தீவிர வன்முறைப் போராட்டத்தில் 60,000ற்கு மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர். பல மில்லியன் பவுண்கள் பெறுமானமான சொத்துக்கள் அழிக்கப்பட்டு இருக்கிறது. இவற்றைவிட மனித அவலங்களும், உறவுப் பிரிவுகளும் நாளாந்த வாழ்க்கையாகிவிட்டது. இதற்கு மேல் ஓர் சமூகம் சமாதானமாக வாழ என்ன விலையை செலுத்த வேண்டும்?

யாழ் பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறையின் தலைவர் டாக்டர் சிவராஜாவின் ஆய்வின்படி குழந்தைகளும் தாய்மார்களும் மரணத்தின் வாயிலுக்குத் தள்ளப்படுகிறார்கள், இளம் பெண்கள் தாய்மை அடையும் விகிதம் அதிகரிக்கிறது. பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுகிறார்கள் அல்லது ஈடுபடுத்தப்படுகிறார்கள். டாக்டர் சிவராஜாவின் ஆய்வு முடிவுகள் அதிர்ச்சி ஊட்டுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் எச்சரிக்கை மணியையும் ஒலித்து உள்ளது.

இன்று வடக்கு — கிழக்கு தமிழ்ச் சமூகத்தின் நிலை முள்ளில் வீழ்ந்த சேலையாக உள்ளது. தொடரும் யுத்தத்தால் வடக்கு — கிழக்கு தமிழ் மக்களே மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளனர். அவர்களுடைய பொருளாதாரம் பாதிக்கப்பட்டு இருக்கிறது. கல்வி, சுகாதாரம், மருத்துவம் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஒரு சமூகத்தின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் மறுக்கப்பட்டு உள்ளது.

இந்நிலை தொடர்ந்தால் அங்கு வாழும் மக்களின் எதிர்காலம் எப்படி அமையும். அம்மக்களும் சமாதானமாக உரிமைகளுடன் வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும். யாழ் மாவட்டத்தின் மக்கள் தொகை 1980 களில் இருந்ததைக் காட்டிலும் 50 வீதம் வரை குறைந்து காணப்படுகிறது. வடக்கு — கிழக்கு முழுவதும் இடம்பெயர்ந்த மக்கள். இன்னும் பல ஆயிரம் பேர் புலம் பெயர முற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மனித அவலங்களுக்கு மேல் சமாதானத்தின் அவசியம் பற்றி யாருக்கும் விளக்க வேண்டியதில்லை.

THESAM
P.O.Box 35806
London, E11 3JX
United Kingdom

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இச் சந்திக்க ஒரு கலை நிகழ்ச்சிக் கலைஞர்களாக இருக்கலாம். ஆனால் இவை கற்பனை உண்மைகள். தமிழ் மொழி மக்கள் ஒருவரை ஒருவருக்கும் முகம் கொடுத்து வாழவும் தமது தனித்துவமாக உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் தான் இந்த தனித்துவ உரிமைகளை வென்றெடுப்பதற்காக தனிநாடாக பிரகடனங்களை உடைப்பதோ, அல்லது தொற்றுவிக்க முடிவதோ முடிவே அல்ல. பல்லாயிரம் மக்களை தமிழ் மக்களின் விடுதலை தமிழீழம் தான் விடுதலை போன்ற அர்த்தமாக இருக்க முடியாது.

இலங்கை முழுவதும் தனிநாடாக பரவிவிட்டு தனிநாடுகளை பாதுகாக்கும் கட்டமைப்புக்கள் தனிநாடாக விரிவாக சகல்களின் மனங்களில் புகுந்து விளையாடி வருகிறது. இத்தகைய நிலைகளை தொடர்ந்து செல்லலாம். தமிழ் மொழி மக்கள் தமது தனித்துவ உரிமைப் போராட்டம் தொடர வேண்டும். தமிழ் பேசும் மக்களின் தனித்துவ உரிமைகள் தன் பரிதாபங்களைச் சார்ந்திருப்பதை அல்ல. அவை மக்களின் பங்குபற்றுதலினால் ஏற்படக் கூடிய தனிநாடாக கட்டமைப்புக்களின் வளர்ச்சியில் தான் உள்ளது. இவை தமிழ் மொழி மக்களின் மத்தியில் மனப்பான்மையும் சிங்கள மக்கள் மத்தியில் குறைந்த நிலைமையும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இப்படிக்கு கலைஞர்களால் எழுதப்பட்ட முகவரிகளை நிராகரிக்கும் விதத்தில் சகல் கத்திலும் எழுதுமாறு தேசத்தின் சார்பாக கேட்டுக்கொள்ளும் நான் நீண்டகாலமாகக் கனவுகண்ட கலை வளர்ச்சியை மேலும் கனவாகவே பார்க்கிறேன்.

வி சபேஸ்வரம்
(டயர்ஸ்)

தேசத்தின் முன்னேற்ற இதழ்களைத் தொடர்ந்து அதனை தொடர்ந்தும் வாசிக்க வேண்டும் என்ற ஆர்வம் எப்போதும் உள்ளது.

M K M கனி
(சார்ஜா)

ஆசிரியர் குறிப்பு :

தேசம் சஞ்சிகை 1997 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1998 ஆகஸ்ட் வரை 8 இதழ்கள் வெளிவந்தது. ஆனால் இச்சஞ்சிகை சில பல தொழில்நுட்ப காரணங்களால் தொடர்ந்து வெளியிட முடியவில்லை. ஆனால் இருநிலை எதிர்காலத்தில் ஏற்படுத்த வகையில் தற்போது மீண்டும் இச்சஞ்சிகையை வெளியிடுகிறோம். இதனை மனம் மொழி மெய்யாக வாழ்த்தும் உங்களை தேசத்தில் தொடர்பிலேயே.

தேசத்தினை நீங்கள் வாங்கும் பட்சத்தில் உங்களை பற்றி சில வரிகளை அனுப்பி வைத்தால் அதனை அனுப்பி வைக்க வசதியாக இருக்கும்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழில் வாழும் 50 வீதத்திற்கு அதிகமான பருவப் பெண்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்படுகின்றனர். இவ்விளம் பெண்கள் இளம் வயதிலேயே கர்ப்பமடைந்து, நலிவடைந்த குழந்தைகளை பிரசவிக்கின்றனர். இப் போசாக்கின்மையின் மொத்த விளைவாக இலங்கைத் தமிழரின் பாரம்பரிய பிரதேசமான வடக்கு — கிழக்கு மாவட்டங்களில் தாய்மை இறப்பு வீதமும் குழந்தைகளின் இறப்பு வீதமும் இலங்கையின் ஏனைய மாவட்டங்களையும் விட மிக அதிகமாக உள்ளது. மேலும், நீண்ட கால போஷாக்கின்மை உடல், மூளை வளர்ச்சி வீதம் மிகவும் ஆபத்தான அளவில் பாதிக்கப்பட வழிவகுக்கிறது.

தாய்மாரும் குழந்தைகளும் தமது இறுதி நாட்களை எண்ணுகின்றனர்

டாக்டர் ந சிவராஜா
தலைவர், சமூக மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்

(இலங்கையின் யுத்த பிரதேச மக்களின் நிலையை வெளிக் கொண்டுவரும் வகையில் யாழ் மக்கள் சமூகத்தை மையமாக வைத்து மேற் கொள்ளப்பட்ட சமூக மருத்துவ ஆய்வு இது. யுத்த பிரதேசத்தில் மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞானபூர்வமான ஆய்வும் இதுவே.)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் நீண்டகால யுத்தம் காரணமாக அங்கு வாழ்ந்த 900,000 வரையான மக்களில் தற்போது 500,000 பேர் மட்டுமே வாழ்கின்றனர். இவர்களில் 300,000 பேர் மட்டுமே தற்போது தமது வாழ்விடங்களில் தமது வாழ்க்கையைத் தொடர்கின்றனர். கடந்த ஆண்டு டிசம்பரில் யாழ் மக்களில் 40 வீதமானோர் யாழ்ப்பாணத்திற்குள்ளேயே இடம்பெயர்ந்து உள்ளனர். 90 வீதமானோர் குறைந்தது ஒரு தடவையாவது இடம் பெயர்ந்து உள்ளனர். யாழினுள்ளேயே இடம்பெயர்ந்த 200,000 பேரில் 20,000 பேர் யாழ் மாவட்டத்தில் அரசாங்க ஆதரவில் உள்ள 154 அகதிமுகாம்களில் தங்கி உள்ளனர். ஏனைய 180,000 பேரும் உறவினர் நண்பர்களுடன், வாடகை அல்லது கைவிடப்பட்ட வதிவிடங்களில் வாழ்கின்றனர்.

குழந்தைகளின் நிலை :

1975-1976 இல் இலங்கை மக்கள் தொகைத் தினைக்களம் மேற்கொண்ட புள்ளிவிபர வெளியீட்டின் (1977) படி இலங்கையில் தமது உயரத்திற்கு ஏற்ப நிறையை கொண்டிராத குழந்தைகள் (wasting or acute under nutrition) 6.6 வீதமாக இருந்தனர். ஆனால் யாழ் மாவட்டத்தில் இவ்வீதம் மிகக் குறைவாக 3.7 வீதமாகவே இருந்தது. இலங்கையின் சராசரியிலும் இது 50 வீதத்திற்குச் சற்றே அதிகமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இவ்வாண்டு பெப்ரவரி-மார்ச் மாதத்தில் தமது உயரத்திற்கு ஏற்ப நிறையைத் கொண்டிராத இவ்வகையான போசாக்கு குறைந்த 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் வீதம் ஆறு மடங்காக, 22.6 வீதமாக அதிகரித்து இருக்கின்றது. மேலும் வயதிற்கு ஏற்ற உயரத்தை கொண்டிராத குழந்தைகள் 36.2 வீதமாக இருக்கின்றனர். கடந்த ஆண்டு David Becker & Michele ஆகியோர் மேற்கொண்ட ஆய்வுகளும் இதே வகையான முடிவுகளையே வழங்கி இருக்கிறது. இவர்கள் 6 - 17 மாத குழந்தைகளில் மேற்கொண்ட ஆய்வில் 18.9 வீதமான குழந்தைகள் உயரத்திற்கு ஏற்ப நிறையை கொண்டிராமலும் 30.7 வீதமான குழந்தைகள் வயதிற்கு ஏற்ப நிறையை (stunting or chronic undernutrition) கொண்டிராமலும் காணப்பட்டனர்.

குழந்தைகளில் மூளைவளர்ச்சியின் 80 வீதம் அவர்களின் முதல் இரண்டு ஆண்டுகளிலும் நிகழ்கிறது. இக்கால கட்டத்தில் ஊட்டச்சத்து குறைவு ஏற்பட்டால் அது குழந்தையின் மூளை வளர்ச்சியை கடுமையாகப் பாதிக்கும். இது யாழ்ப்பாணம் உட்பட்ட தமிழர் தாயகப் பகுதிகளில் மூளை வளர்ச்சி குன்றிய அல்லது ஆற்றல் குறைந்த சந்ததியை உருவாக்கும்.

யாழ் மக்கள் தொகை - டிசம்பர் 2000

மக்கள்	எண்ணிக்கை	%
உள் இடம் பெயர்ந்தோர்	202,000	40.2
மீளக் குடியேறியோர்	245,000	48.8
இடம்பெயராதவர்கள்	55,000	11.0
மொத்தம்	502,000	100.0

தகவல் - யாழ் அரச அதிபர் அலுவலகம்

தேசம் - விளக்கம்

வயது, நிறை, உயரம் ஆகியனவே குழந்தையின் போசாக்கு நிலையைக் காட்டும் சிறந்த காட்டிகள். இவற்றிற்கு இடையிலான வீதங்கள் குழந்தையின் போசாக்கு நிலையை காட்டும் தெளிவாக மதிப்பிட பயன்படுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்ட அகதிமுகாம்களில் உள்ள குழந்தைகளின் போசாக்கு நிலைமை	
போசாக்கின்மையின் வகை	%
உயரத்திற்கு ஏற்ற நிறையின்மை	22.6
வயதிற்கு ஏற்ற உயரமின்மை	36.2
உயரத்திற்கு ஏற்ற நிறையின்மை	47.7

Source : Sivarajah N. Nutritional Survey of Welfare Centres in Jaffna district. WFP

மொத்தம் 8.5 வீதமான குழந்தைகள் பருத்த உடலுடையவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். ஆனால் 12.7 வீதமான குழந்தைகள் பயிற்றப்பட்ட ஓர் மருத்துவ உதவியாளரால் மெலிந்தவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இவ்விரு முரண்பாடுகளும் நிலவும் இயற்கைச்சூழலையே நாம் கண்டறிகிறோம். இவ்வாறான முரண்பாடுகள் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் காணப்படுகின்றன. இவ்வாறான முரண்பாடுகளுக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. இருப்பினும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் பருத்த உடலுடையவர்கள் என இனங்காணப்பட்டவர்களில் பெரும்பாலானோர் உண்மையில் மெலிந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

தாய்மை அடையும், பாலூட்டும் பெண்கள் நிலை :

பொதுவாக அனைத்துப் பெண்களுமே anaemia நோயால் பாதிக்கப்பட்டு உள்ளனர். ஆனால் பருவ வயதில் உள்ள பெண்கள் (15 - 19 வயது), தாய்மை அடையும் பெண்கள், பாலூட்டும் பெண்கள் ஆகிய பிரிவினரில் anaemia வின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. வயோதிபர்கள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலும் தாய்மை அடைதல், பாலூட்டுதல் பெண்களில் 60 வீதமானவர்களிலும் பருவ வயதில் உள்ள 50 வீதமான இளம் பெண்களும் anaemia நோய் பாதிக்கப்பட்டு உள்ளனர். anaemia ஆல் பாதிக்கப்பட்ட இவர்களில் 5% வீதமானவர்களுக்கு மட்டுமே மருத்துவ உதவி கிடைத்துள்ளது. தாய்மை அடைதல், பிரசவம் மற்றும் பிரசவத்திற்குப் பின்னான காலங்களில் சிகிச்சை வேண்டி நிற்கின்றனர். இவர்கள் anaemia நோய் இருந்து மீண்டு வருவதை காண்பதற்கு பிரசவத்தில் சிக்கல்கள் ஏற்படலாம்.

சின்னத் தாய்மார் : இளம் தாய்மாரின் வளர்ச்சியை கருதி இரு தசாப்தங்களாக அறிந்து வருகிறோம். குறிப்பாக ஆகதி முகாம்களில் சிறுமிகளே பெரும்பாலும் தாய்மை அடைவது பொதுவான அவதானமாக இருந்து வருகிறது. ஓர் இடத்தில் தங்கியுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது. இவ்வாறான நெருக்கடி நிலைப்படுதலுக்கான வாய்ப்பை அதிகரிப்பதாக இச் சின்னத் தாய்களின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றது.

தாய்மை அடைந்த பெண்களில் 15.3 வீதத்தினர் 20 வயதிற்குக் குறைவானவர்கள் என்பது தெரிய வந்துள்ளது. மேலும் அவர்களுடைய கணவர்களில் 5.4 வீதத்தினர் 20 வயதிற்கு குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். மிருதுவான இச்சின்னத் தாய்கள் தாம் தாய்மை அடைந்ததை அறிந்த பின்னர் தம் கல்வியை இடை நிறுத்தி தமது கணவர்களை வரவழைத்தனர். இதனால் எவ்வித முன்னேற்றமும் அடையாத, பொருளாதார ரீதியாலும் இன்றிய வருமானம் அற்ற நிலைமையினை இவர்கள் அடைகின்றனர். மேலும் தமிழ் பிரதேசங்களில் காணப்படும் நிச்சயமற்ற தன்மையினால் பெற்றோரை தமது வீடுகளில் பிள்ளைகளை இளவயதிலேயே திருமணம் செய்து கொடுத்து விடுகின்றனர். இவை எல்லாவற்றும் தாய், சேய் போசாக்கு நிலையை மிகவும் பாதிக்க வழிசெய்கிறது.

மரணங்கள் :

இப் பெண்களும் குழந்தைகளும் எதிர்காலம் நம்பிக்கை தருவதாக இல்லை. இவர்கள் நோயுக்கு உள்ளாகி தம்மை இருக்க வைத்துள்ளனர். இன்று anaemia வால் பாதிக்கப்பட்டு உள்ள இப்போதைய இளம் பெண்கள் விரைவில் anaemia வால் பாதிக்கப்பட்ட தாய்மை நிலையை அடைவார்கள். இவர்கள் தமது பிரசவத்தின் போது உயிரிழப்பதற்கான சாத்தியம் அதிகம். இவர்கள் பெற்றெடுக்கும் குழந்தைகள் நிறை குறைவாகவும், நோய்களினால் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாகவும் அல்லது உடல், மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டவர்களாகவும் இருப்பர். இவ்வகையில் ஏனைய பால் வேறுபாடு குறிகாட்டிகளில் பார்க்கும் போது வயது குறைந்த பால் அங்கத்தவர்களில் பிரசவங்கள் சம்பந்தப்பட்ட மரணங்களும் குழந்தைகளின் மரணங்களும் மிகவும் உயர்வாகக் காணப்படுகிறது.

முடிவுரை :

இப் பெண்களில் anaemia வின் உடல், மூளை வளர்ச்சிக்கு மிகவும் குறுங்காலம், நீண்டகாலங்களில் பிள்ளைகள் மற்றும் பெரியவர்களில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் முழுமையாக அளவிடப்படவில்லை. பெரும்பாலான பிள்ளைகள் காலைச் சாப்பாடு இன்றியே பாடசாலைக்கு வருகின்றனர். நண்பகலுக்கு மேல் சாப்பாடு கிடைக்கும் வரையிலும் மிக மயக்கமான நிலை காணப்படுகிறது.

இப் பெரும் சுமையை தவிர்க்க வேண்டுமானால் உடனடியாக நீண்ட நடவடிக்கை அவசியம். இது மிகவும் வறுமையான போசாக்கின்மைக்கு எதிரான போராட்டம் ஆகும். இது ஆரம்பிக்கப்பட்டு தொடர வேண்டும். சமூகங்கள் மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளில் போசாக்கின்மைக்கு எதிரான போராட்டங்களை முழுமையாக வெற்றி கொள்ள முடியாத. அப்படி ஒரு நிலை ஏற்படுவதை தடுப்பதற்கு அனைவரும் தொடர்ந்து நாம் உயிர்களை இழக்க வேண்டி ஏற்படலாம்.

பெண்கள் மத்தியில் **Anaemia** வின் தாக்கம்	
Anaemia வின் நிலை	யாழ்ப்பாண பெண்கள்
குறைந்த நிலை	28.8%
தலையிடத்தக்க நிலை	28.8%
கடுமையான நிலை	3.4%
மொத்தம்	61.0%
Anaemia வின் நிலை	பாலூட்டும் தாய்மார்
குறைந்த நிலை	14.6%
தலையிடத்தக்க நிலை	41.8%
கடுமையான நிலை	3.6%
மொத்தம்	60.0%
Anaemia வின் நிலை	பருவப் பெண்கள்
குறைந்த நிலை	29.7%
தலையிடத்தக்க நிலை	20.3%
கடுமையான நிலை	6.2%
மொத்தம்	56.2%

Source : Sivarajah N. Nutritional Survey of Welfare Centres in Jaffna district. WFP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியாவில் தமிழர்கள்

வெளிப்படாத ஓர் சக்தி

த ஜெயபாலன்

பிரித்தானியாவில் குறிப்பாக இலண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழும் தமிழ் மக்களின் எண்ணிக்கை 100,000 வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டு உள்ளது. முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் மக்கள் தொகைக்கு ஈடான அளவு மக்கள் இலண்டனிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வாழ்கின்றனர். ஆனால் இத்தமிழ் மக்கள் பிரித்தானியாவின் பிரதான அரசியல், சமூக, நீரோட்டத்தில் இருந்து விலகியே காணப்படு கின்றனர். விரல் விட்டு எண்ணக் கூடிய சிலர் பிரித்தானிய அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு உள்ளனர். ஆனால் அவர்களும் தமிழ் மக்களின் முழுமையான ஆதரவைப் பெறத்தவறி உள்ளனர். தெற்கு பிரன்ட் தொகுதியில் கொன்சவேடிவ் கட்சி சார்பில் போட்டியிட்ட கருப்பையா செல்வராஜா, கிழக்கு ஒக்ஸ்போர்ட் தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்ட பத்மநாதன் மயில்வாகனம், நியூஹாம் தொழிற்கட்சி உள்ளாட்சியாளர் போல் சத்தியநேசன், மனோ தர்மராஜா ஆகிய ஒரு சில தமிழர்கள் பிரதான அரசியல் நீரோட்டத்தில் கலந்து உள்ளனர்.

ஆனால் தமிழ் மக்கள் தம்மை இன்னமும் பிரதான நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளவில்லை. இலண்டனிலும் சுற்றுப் புறங்களிலுமாக 50 தொகுதிகளில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் தேர்தல் பட்டியலில் தமது பெயர் களை பதிவு செய்வது இல்லை என்றும் அப்படி பதிவு செய்பவர்கள் கூட தேர்தல் சமயத்தில் வாக்களிப்பது இல்லை என்றும் உள்ளாட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின் றன. தமிழ் மக்கள் தமது வாக்குகளை செலுத்தாமலும் பிரித்தானிய சமூகத்தின் பிரதான நீரோட்டத்தில் கலந்து கொள்ளாமலும் இருப்பது அவர்கள் தமது ஜனநாயக உரிமைகளை இழக்க வழியமைப்பதா கவே உள்ளது.

நடந்து முடிந்த தேர்தலுக்கு சற்று முன்னதாக பிரித்தானிய உள்துறை அமைச்சு விசேட ஏற்பாடு ஒன்றை அறிமுகப்படுத்தி இருந்தது. அதன் படி குறிப்பிட்ட சில இனங்களை பாரபட்சமாக நடாத்த உள்துறை அமைச்சு குடிவரவு அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கி இருக்கிறது. அப்படி பாரபட்சமாக நடத்தப்பட வேண்டிய இனமாக தமிழ் இனமும் முத்திரை குத்தப்பட்டு உள்ளது. 'தமிழன் என்று சொன்னால் தலை குனிந்து நில்லு' என்கிறது உள்துறை அமைச்சு. 2000 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இன உறவுகள் பற்றிய திருத்தம் பொதுமக்கள் நிறுவனங்கள் இனப்பாராபட்சம் காட்டுவதைத் தடை செய்கிறது. ஆனால் குடிவரவுத்துறைக்கு இதிலிருந்து விதிவிலக்கு அளித்து இருக்கிறது. இதன்படி சில இனத்தவர்களை மற்றைய இனங்களிலும் குறைவாக நடத்தச் சட்டம் இடமளிக்கிறது.

இவ்வாண்டு ஏப்ரல் 23ம் திகதி கொண்டுவரப்பட்ட மேலதிக திருத்தம் " discrimination on ground of ethnic and national origin" என குறிப்பிடுகிறது. தற்போது அப்படி பாரபட்சம் காட்டப்பட வேண்டிய இனங்களாக தமிழ், குர்திஷ், ரோமா, அல்பேனியன், பொன்ரிக் கிறீக், சோமாலி, அப்கான் ஆகிய இனங்கள் குறிப்பிடப்பட்டு உள்ளன. இதன் மூலம் மேலுள்ள இனங்கள் சட்டவிரோத குடியேற்றக் காரர்களாகவும் மோசடியாளர்களாகவும் முத்திரை குத்தப்பட்டு உள்ளனர். இது பற்றி எதிர்ப்புக் குரல் எழுப்பவோ சுட்டிக் காட்டவோ தமிழ் மக்கள் மத்தியில் ஈடுபாடான நபர்களுக்கும் அமைப்புகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது.

தமிழர் உட்பட்ட சிறுபான்மை இனங்கள் தொழிற்கட்சிக்கே தமது முழுமையான ஆதரவை அளித்து இருந்த போதும் குடிவரவு அரசியல் தஞ்சம் சம்பந்தப்பட்ட விடயங்களில் தொழிற்கட்சி, கொன்சவேடிவ் கட்சியைப் போன்றே நடந்து கொண்டது. இன்னும் சொல்லப்போனால் வில்லியம் ஹேக்கினதும் அன் விடகொம்மினதும் அரசியல் தஞ்ச எதிர்ப்புக் கொள்கை க்கு ஈடான கடுமையான விதிமுறைகளையே தொழிற்கட்சி அமுல்படுத்தி உள்ளது. எக்கட்சி ஆயினும் தமிழர்கள் தமது ஜனநாயக பலத்தைக் காட்டாத வரை பலவீனப்பட வேண்டியதாகவே இருக்கும்.

பிரித்தானியாவில் சில தமிழர்கள் தனியன்களாக முன்னேற்றமடைந்து உள்ளனர். ஆனால் சமூகமாக அவர்கள் இன்னமும் வளர்ச்சி அடையவில்லை. கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரம் ஆகிய விடயங்களில் இன்னமும் வளர்ச்சி அடைய வேண்டி உள்ளது. மேலும் தமிழர்கள் ஓர் தனித்துவமான இனம் என்ற வகையில் பல்லின கலாச்சார பிரித்தானியாவில் தமக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய அவசி யத்தை பலர் வெளிப்படுத்தி வருகின்றனர். எமது அடுத்த தலைமுறையினர் பெருமையுடனும் உரிமையுடனும் வாழ இன்றைய தமிழர்கள் தமது ஒன்றுபட்ட சக்தியை வெளிக் காட்ட வேண்டும்.□□□□□□□□□□□□□□□□□□□□□□□□

கென்னடி பிளேயர் ஹேக்
பிரித்தானிய அரசியலின் தலைவிதியை
நிர்ணயிக்க போட்டியிட்ட தலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆட்சிக் காலத்தில் (1991 - 1996) ஒரு ரூபாயைச் சம்பளமாக பெற்ற இல்லாத முதல்வர். கைது செய்யப்பட்ட போது அவரது இல்லத்தில் இருந்து 10,000 பட்டுப் சேலைகளும் 750 சோடி பாத அணிகளும் 64 இறக்குமதி பெறுமதியான வைரம் பதித்த தங்க நாணயங்களும் கைப்பற்றப்பட்டது. அச்சமயத்தில் அவர் 514 மில்லியன் பெறுமதியான சொத்துக்களையும் கொண்டிருந்தார். இவர்கு எதிராக 40 ற்கு மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருந்தது. இரண்டு மோசடி மற்றும் ஊழல் வழக்குகளில் முறையே 2 ஆண்டுகளும் 3 ஆண்டுகளும் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இரண்டு ஆண்டுகளே கழி உண்டுவிட்டு வெளியே வந்துவிட்டார்.



இந்திய அரசியலில் குறிப்பாக மாநிலங்கள் மட்டத்தில் அரசியல்வாதிகளின் ஊழல் விவகாரம் ஒன்றும் புதிய விவாதப் பொருள் கொண்டதல்ல. முன்னாள் முதலமைச்சரும் 5 முறை சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியுமான ஜெயலலிதா இந்தமுறை முதலமைச்சராகவே உள்ளார். தேர்தலில் போட்டியிடத் தகுதியை இழந்ததாக தேர்தல் ஆணையத்தால் ஜெயலலிதாவைத் தவிர்த்த தேர்தலில் போட்டியிட அனுமதிக்க மாநிலம் இருந்தது. ஆனால் அவரை நிரந்தரமாக முன்னேற்றக் கழகம் என்ற கொடி உருவாக்கி தொடர்ந்து ஆளும் கட்சியாக பிரதான முன்னேற்றக் கழகத்தினரும் வருகின்றனர். ஆனால் தமிழக மக்கள் ஒவ்வொரு தேர்தலிலும் மாறி மாறி ஆட்சியை மாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மாதம் 30 ந்தேதி தனது 76வது பிறந்த தினத்தைக் கொண்டாடிய மக்களால் கருணாநிதியின் தோல்வி தனிமனித வாழ்வின் அவலமாகவும் அனுதாபமாகவும் ஆளுமையின் முடிவாகவும் பார்க்கப்பட்டது. எதிர்பாராத தோல்வி அவரைச் சுற்றி ஆண்டாண்டாக கோட்டையாக நினைத்தே பார்க்க முடியாது போனவர்கள் முழுத் தோல்வியை தனது கண்களில் நேரடியாக இருக்க முடியாது என அறிவித்து இறுதி வரையும் இன்னொரு தேர்தலில் நிற்போம் என்பது சந்தேகமே. மேலும் அரசு தேர்தலில் நிற்கும் இரு வயதும் 82 வயதை அடைந்து விட்டார். அதிகாரம் அவரது உடல் அவரது மனவுறுதியைக் கட்டுப்படுத்தி வைத்திருந்ததா? என்பதைப் பொறுத்தவரை ஜெயலலிதாவின் மீதான சட்டவிரோத மாகச் சேர்த்த சொத்து விவகாரம் அவரின் அரசியல் வாழ்வை அஸ்தமனமாக்கி விட்டது.

அதே 14 வருடங்களே அரசியலில் சந்தித்த வெற்றி, தோல்வி அனைத்திலும் தனிமனித ஆளுமை மற்றும் குற்றவாளிப்பான முகமே தோற்றுப்போனது அனைத்து மீடியாக்களாலும் தனது 80 அகவை நிறைவை எதிர்பார்த்திருந்த தமிழ் ஆர்வலர்களும் வைரமுத்து போன்ற கவிஞர்களை வைத்து கவிதை தயாரித்து வெளியிட்டார். தொலைக்காட்சியில் இன் வெளியீடு முக்கிய காரணமாக அமைந்தது திருவாரூரை பிறப்பிடமாகவும் மதிமுகவும் திருவாரூர் முத்துவேல் கருணாநிதி பல தொகுதிகளில் வென்றிருந்தும் முடியாத. கொள்கை ரீதியாக கட்சி வேறுபாடும் பிளவுகளும் தமிழகத்தின் தலைவிதி மாற்றி அமைத்து உள்ளது. இரு விதவைகளின் கட்டளை எதிர்கால நல்ல தமிழகம் என்பதையும் மக்களின் அரசியல் விழிப்புணர்வையும் முடிவில் காணலாம்.

இதற்கிடையே தமிழகத்தில் பரவலாக பல கூறப்பட்டு வந்தபடி சென்னை தொலைக்காட்சி மேலும் இலங்கைத் தமிழருக்கு எதிரான கொடிபிடிக்கும் அதிகரிப்பதாக அச்சம் ரிலீஸ் செய்கின்றன.□□

தமிழகம் - தேர்தல் முடிவுகள் - மே 2001

மொத்த தொகுதிகள் 234

கடசிக் கூட்டணிகள்	வென்ற தொகுதிகள்
திமுக கூட்டணி	37
அதிமுக கூட்டணி	193
மதிமுக	0
எனையவை	4

கடசிகள்	பெற்ற வாக்குகள்	
திமுக	8,065,938	29.19%
அதிமுக	8,775,197	31.28%
மதிமுக	1,235,030	4.47%

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தொலைக் காட்சிகள்

தமிழர் இல்லங்களில் ஓர் பந்தயம்

த ஜெயபாலன்

தொலைக்காட்சி கண்டுபிடிக்கப்பட்டதில் இருந்து அது அனைத்துத் தரப்பு மக்களையும் கவரும் சிறந்த ஊடகமாக இருந்து வருகிறது. அவ்வூடகம் உட்பட எந்த ஓர் ஊடகமும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் இன்று வரை செல்வாக்குச் செலுத்தி இருக்கவில்லை. ஆனால் எதிர்காலத்தில் இத்தன்மை மாறுவதற்கு சாத்தியம் உண்டு. பெரும்பாலான ஈழத்தமிழர் புலம்பெயர் நாடுகளிலும் தமது ஜனநாயக உரிமைகளை அனுபவிப்பதற்கு பயப்படுவதால் தொலைக் காட்சி உட்பட்ட அனைத்து ஊடகங்களும் வெறும் ஊது குழலாகவே காணப்படுகிறது. ஆனால் தமிழ் சமூகத்தின் பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் தற்போது ஊடகங்கள் வெளிவருவதால் பல்வேறு சிந்தனைகளும் தோன்றும். இதனால் தமிழ் ஒளிபரப்புகளின் தோற்றமும் மக்களிடையே பல சிந்தனைகளுக்கு களம் அமைக்கும்.

இலண்டனில் தமிழ் தொலைக்காட்சிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. சில ஆண்டுகளாக பிரான்ஸில் இருந்து இயங்கிய ரிஆர்ரி தொலைக்காட்சி ஐபிசி வானொலியுடன் கடந்த ஆண்டு இணைந்து கொண்டது. அத்துடன் கடந்த ஆண்டு நடுப்பகுதியில் ஆசிய மில்லியனரான துரைபத்மநாதன் தீபம் தொலைக்காட்சியை ஆரம்பித்தார். தற்போது டிஜிற்றலில் மற்றுமோர் தமிழ் ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

1.68 மில்லியன் ஆசிய மக்கள் பிரித்தானியாவில் 500,000 வீடுகளில் வாழ்கிறார்கள். இதில் அண்ணளவாக தமிழ் மக்களின் மக்கள் தொகை 100,000 ஆகவும் அவர்கள் 35,000 வீடுகளில் வசிப்பவர்களாகவும் மதிப்பிடலாம். ஐரோப்பா முழுவதும் 300,000 தமிழர்கள் 100,000 வீடுகளில் வசிப்பதாக மதிப்பிடலாம். (இத்தரவுகள் அண்ணளவான மதிப்பீடுகளே. தற்போது தமிழர்கள் தனி ஓர் சமூகமாக கணிப்பெடுக்கப்படாததால் மேற்படியான அண்ணளவான மதிப்பீடுகளை பயன்படுத்துகின்றோம்.) தமிழ் ஒளி பரப்புக்கள் இலண்டனில் உள்ள 35,000 இல்லங்களையும் இலண்டன் உட்பட்ட ஐரோப்பா முழுவதுமாக 100,000 இல்லங்களை நோக்கி தமது போட்டியை ஆரம்பிக்கும். தமிழர் ஒளிபரப்புகளும் வர்த்தக ரீதியில் வெற்றி அடையாவிட்டால் தமது முடிவு காலத்தை எண்ண வேண்டி இருக்கும். குறிப்பிட்ட தொகை மக்களை நோக்கி பல நிறுவனங்களும் போட்டியிடும் போதும் டாவினின் கொள்கைப்படி 'தக்கன பிழைக்கும்' என்பதே உண்மையாகும். ஆனால் போட்டிகள் அளவோடு இருப்பது மக்களுக்கு மிகவும் பலனளிக்கும். ஏனெனில் சிறந்த நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிப்பார்கள். கருத்துக்களிலும் செய்திகளிலும் ஏகபோகத்தன்மை இருக்காது.

500,000 ஆசிய இல்லங்களைக் கொண்ட பிரித்தானியாவில் ஆசியர்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்ட 15 ஆசிய ஒளிபரப்புகள் உண்டு. ஜனவரியில் மேர்லொச்சின் ஸ்டார் ஊடக நிறுவனம் ஸ்டார் நியுஸ் (24 மணிநேர செய்திகள் - ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும்), ஸ்டார் பிளஸ் (பொழுது போக்கு) என மேலும் 2 ஒளிபரப்பு சேவைகளை ஆரம்பித்து வைத்துள்ளது. ஸ்டார் ஒளிபரப்பு 53 நாடுகளில் 28 ஒளிபரப்புகளை 7 மொழிகளில் நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது. பிரித்தானியாவிலும் இந்தியாவிலும் ஸ்டார் ஒளிபரப்பிற்குப் போட்டியாக இந்தியரான சுபாஷ் சந்திராவின் சி(ஐ) ரிவி இருந்து வருகிறது. சி ரிவி 150,000 சந்தாதாரர்களை பிரித்தானியாவில் கொண்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஸ்டார் ரிவி அடுத்த ஓர் ஆண்டிற்குள் 50,000 சந்தாதாரர்களை வென்றெடுக்க வேண்டும் என திட்டமிட்டுள்ளது.

ரிஆர்ரி, தீபம் தொலைக்காட்சிகளை பார்ப்பதற்கு அதற்கான விசேட இணைப்புகளை வாங்க வேண்டும். ஆனால் தற்போது ஆரம்பிக்கப்பட்டு உள்ள தமிழ் ஒளிபரப்பு டிஜிற்றலினூடாக தனது ஒளிபரப்பை மேற்கொள்கிறது. தமிழ் தொலைக் காட்சி ஒளிபரப்புகள் மிகவும் பாவனையில் உள்ள ஸ்கை, டிஜிற்றல், கேபிள் நிறுவனங்களினூடாக ஒளிபரப்பு செய்யுமிடத்து கூடிய பார்வையாளரைக் கவர முடியும். மேலும் தமிழ் தொலைக் காட்சிகள் அனைத்து பெரும்பான்மை ஒளிபரப்பு நிறுவனங்களாலும் ஒளிபரப்பக் கூடியதாக இருக்க வேண்டும். அல்லது ஒரே நிறுவனத்திற்கு ஊடாக அனைத்து தமிழ் ஒளிபரப்புகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்படி இருந்தால் பார்வையாளர்கள் தமக்கு எந்த ஒளிபரப்பு தேவை என எண்ணுகிறார்களோ அதனை தெரிவு செய்து கொள்ளலாம்.

வன்முறை மட்டுமே அறியப்பட்ட மொழியாக பயன்படுத்தப்பட்டு வருவதால் தொலைக் காட்சிகளும் ஏனைய தொடர்பு சாதனங்களும் சர்ச்சைக்குரிய விடயங்களை தவிர்த்து வருகின்றன. மேலும் வியாபார போட்டிக்காக அரசியல் சாயம் பூசிக் குழிபறிப்புச் செய்வதும் அண்மையில் இடம்பெற்று உள்ளது. இவை போன்ற காரணங்களால் விரும்பியோ விரும்பாமலோ தொலைக் காட்சி ஒளிபரப்புகள் பெருமளவில் சினிமா விலேயே தங்கி உள்ளன. திரைப்படங்களையும் மெகாசீரியல்களையும் ஒளிபரப்பி நேரத்தை நிரப்ப வேண்டிய நிலமை இருக்கிறது. ஆனாலும் புலம்பெயர் தமிழர்களின் மத்தியில் பெருகிவரும் தொலைக்காட்சி, பத்திரிகைகள் போன்ற ஊடகங்களும் இணைய வலையங்களின் வளர்ச்சியும் எதிர்காலத்தில் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr ந சிவராஜா
(தலைவர்,
சமூக மருத்துவம்
யாழ் பல்கலைக்கழகம்) அவர்களின்

Health Care for North - East Sri Lanka

Reflection for the future

இது ஒரு தேசம் வெளியீடு

பத்து பிரதேசத்தில் இருந்து மிக அண்மைக் காலத்தில் வெளிவரும் சமூக மருத்துவ ஆய்வு நூல் இதுவாகும்.

இலங்கை வடக்கு — கிழக்கு பகுதிகளில் சாணைப்படும் மருத்துவ, சுகாதார சீர்குலைவுகளையும் அதனால் ஏற்படுகின்ற சமூக சீரழிவுகளையும் ஆதாரபூர்வமாக முன் வைக்கிறார் ஆசிரியர்.

ஒவ்வோரு ஊடகவியலாளரும் சட்ட அறிஞர்களும் தம்மிடத்தே வைத்திருக்க வேண்டிய ஓர் கை நூல்.

இந்நூலை பெற விரும்புபவர்கள் £5 காசோலையுடன் (தபாற் செலவு உட்பட) உங்கள் பெயர், முகவரியை தெளிவாக குறிப்பிட்டு கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

THESAM
BO Box 35806
London E11 3JX

மலையகத் தமிழர் சுதந்திரத்தை மறுக்கும் எண்ணம். தமிழ் மக்களின் மீது போடப்பட்ட பொய்யான சமூகமாக இந்நாளில் தான் அவர்கள் மத்தியில் இருந்து பல பத்திரிகைகள், சஞ்சிகைகள், மற்றும் ஒலைவெட்டி வெளிவருகின்றது.

"மலையும் பிறவும்" என்ற மாதவி சேனாதிபதி வைத்திருக்கிறார். பெண் என்பவள் உலகில் உயர்ந்தவள். பெண்மைக்கு நிகரானது உலகில் வேறு எதுவும் இல்லை எனலாம். எனினும் உலகின் மனித இனத்திற்கு அடிப்படைத் தாயாகும் பெண்கள் தான் எனலாம். அவர் நிலைமை என்றால் உலகில் ஓர் அணுவும் அசையாது. ஆதலால் தானோ இந்த மகத்தான சக்திக்கு பெண் உருவம் கொடுத்து புனிதமாக வழிபடுகின்றார்.

அந்தரனை காடி வைத்த நீங்களும்போல்லை என்ற முதல் ஓவியத்தினைப் போதிக்கும் புத்தனை என்றாலே பெண்ணே. மதங்களால் சமூகங்களாலும் அரசாங்கங்களை ஆராயும் விஞ்ஞானிகளாலும் பெற்று வீடுகளும் அடிமைகளே. அரும்பாக் காலங்களில் வீட்டினில் அடங்கிக் கிடந்த பெண்கள் தற்போது வெளியுலகிற்கு வந்து விட்டனர். அவர்களின் அளப்பரிய சேவையால் உலகம் மிகவும் பயன் பெற்று வருகின்றது. சொல்லப் போனால் தற்போது பெண்கள் இல்லாத துறையே இல்லை எனலாம். விண்வெளி ஆராய்ச்சியாளர் முதல் விண் கோளிப் பணிப் வரை அவர்கள் முன்னிலையில் இருக்கின்றனர்.

எமது அன்றாட வாழ்க்கையில் ஆண்களின் பங்கை விட பெண்களின் பங்கு அளப்பரியதாகிவிட்டது. வீடினையும் நிர்வாகம் செய்து கொண்டு மற்ற சேவைகளும் செய்யும் பல பெண்கள் தற்போது உள்ளனர். ஆண்களுக்கு ஒரு மொழி என்றால் பெண்களுக்கு இரண்டு பொழிப்புக்கள் எனலாம். வேலை செய்யும் இடங்களிலும் அவர்கள் தினமும் விதந்து வேலை செய்ய வேண்டும். அதே போல் வீடிலும் கணவன், குழந்தைகள் என வந்து வேலைபடும் அவர்களின் சிந்தனை உள்ள வண்ணமே இருக்க வேண்டும். அவர் ஒருவர் ஒரு வேளைபடி சேவை செய்ய வேண்டும். இதனால் இவர்களின் மனநிலையும் ஓர் நிலையில் இருப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லை எனலாம்.

இப்படிப்பட்ட உன்னதமான பெண்மையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் – சில விபரங்கள்

உழைப்பு :

மொத்த வேலை நேரத்தில் 2/3 பங்கை பெண்கள் செய்கிறார்கள். ஆனால் உலக வருமானத்தில் 10% வரையே அவர்கள் பெறுகின்றனர். சொத்துக்களில் 1% தரைவான சொத்தையே அவர்கள் கொண்டு உள்ளனர்.

பாராளுமன்ற பிரதிநிதித்துவம் :

அமெரிக்கா	– 12.7%
ஐரோப்பா	– 40.4%
ஆபிரிக்கா	– 10.4%
அராபியா	– 3.3%
ஆசியா	– 13.1%

1857 – மார்ச் 8 – சம ஊதியம் கோரி முதலாவது பெண்கள் கிளர்ச்சி நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

1903 – பௌதிகவியலில் மேரி கியூரி நோபல் பரிசு பெற்றார். இப்பரிசைப் பெற்ற முதலாவது பெண் இவராவார்.

1910 – பெண் தொழிலாளர்கள் வாக்குரிமை கோரி போராட்டம் நடத்தினர்.

1971 – உலகின் முதல் பெண் ஆட்சித் தலைவியை இலங்கை மக்கள் தெரிவு செய்தனர்.

1975 – சர்வதேச பெண்கள் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவு செய்தது.

ஆட்கொள்ளும் ஆணினமே அதிகமாக உள்ளது. பெண்கள் என்றாலே ஆண்களின் சொல் படியும் எண்ணப்படியும் தான் செயல்பட வேண்டும், தங்களின் ரசனைக்கு ஏற்றபடி தான் பெண்கள் வாழ வேண்டும் என நினைக்கும் ஆண்களே அதிகம். ஆண்களின் ஆசைப்படியே ஆடை அணிகலன்கள் அதிகம் அணியும் பெண்கள் உள்ளனர். தங்களின் ஆசைகள் எப்படியோ அப்படியே கணவனின் ஆசைகளைப் பூர்த்தி செய்யும் பெண்களும் உள்ளனர்.

இதனை விடவும் பாலியல் காரணமாகவும் பெண்கள் அடிமை கொள்ளப்படுகின்றனர். எமது ஆசிய நாடுகளில் விருப்பமில்லாத பாலியல் உறவுகள் அதிகம் நடைபெறுகின்றன. பெண் என்பவள் வெளியில் வேலையும் செய்து பின்னர் வீட்டினில் கணவனுக்கும் பிள்ளை களுக்கும் தேவையானவற்றினையும் செய்து களைப் படைந்து படுக்கைக்கு செல்லும் போது கணவன் தனது ஆசையினை வெளிப்படுத்துவான். கணவனின் ஆசையி னைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்ற காரணத்தினால், அவள் விரும்பாவிடினும் கணவனுடன் படுக்கையினை அவள் பகிர்ந்து கொள்கிறாள். அதனால் அவளின் மனம், உடல் இரண்டுமே பாதிப்படைகின்றது. இவ்வகையிலும் ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்திக் கொண்டே இருக்கின்றனர்.

இது தவிர வேலைசெய்யும் இடங்களிலும் பெண்கள் பல பாலியல் தொல்லைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். பெண் என்பவள் பொதுவாகவே வெட்க சுபாவம் கொண்டவள் என்பதால் தங்களுக்கு ஏற்படும் இப்படியான அவல நிலைகளை வெளியில் சொல்வதில்லை. இதனையே ஆண்கள் தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்கின்றனர். குறிப்பாக எமது ஆசிய நாடுகளில் பெண்களை அடிமைப்படுத்துவது மிக மிக அதிகம். இந்திய மாநிலங்களில் சிறு பெண் பிள்ளைகள் (வயதிற்கு வராதவர்) கூட பாலியல் வன்முறைக்கு உட்ப டுத்தப்படுகின்றனர். ஏன் கல்கத்தாவில் சிறு பெண்களைக் கொண்ட விபச்சார விடுதிகள் உள்ளன. விபச்சாரம் என்பதில் ஒரு ஆணும் பெண்ணும் சம்பந்தப்பட்டு உள் ளனர். ஆனால் அதில் ஈடுபடும் பெண்ணுக்கு மாத்திரமே விபச்சாரி என்ற பட்டத்தினை இந்த உலகம் சூட்டியுள்ளது. ஆனால் அந்த ஆண்மகன் எத்தனை பெண் களுடனும் தொடர்பு கொள்ளலாம். அவன் உத்தமனே. தவிர பெண்களை அரபு நாடுகளுக்கு விற்கும் ஆண்களும் உள்ளனர். ஏன் தமிழ்நாட்டில் உசிலம்பட்டி போன்ற கிராமங்களில் பெண் பிள்ளைகள் பிறந்தால் அவர்களை கள்ளிப் பாலினாலோ, நெல்மணிகளைக் கொடுத்தோ அவர்களை முளையிலேயே கொன்று விடுவது உலகறிந்த விடயம். மொத்தத்தில் பெண்கள் ஆண்களால் ஆட் கொள்ளப்பட்டே வருகின்றனர்.

ஆனாலும் மேலை நாடுகளில் பெண்விடுதலை இயக்கங்கள் பல தோன்றி பெண்களின் பாதுகாப்பு, சமூக அந்தஸ்து என்பவற்றினை வலியுறுத்தி உள்ளன. இதற்காக அரசுகள் பெண்களுக்கான பாதுகாப்புச் சட்டங்களையும் இயற்றியுள்ளன. இதனால் மேலைத்தேய பெண்களின் சமூகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் எமது கீழைத்தேசங்களில் பெண்களின் நிலை தொடர்ந்தும் கவலைக்கிடமே. ஆனாலும் தற்போது எமது ஆசிய நாட்டினில் பெண்கள் தாமாகவே தங்களின் நிலை-களை உயர்த்தியுள்ளனர். பல ஆசிய நாட்டில் பெண்கள் நாட்டினையே ஆளுகின்றனர். வீட்டினை ஆண்டவர்கள் தற்பொழுது நாட்டினை ஆளப்புறப்பட்டு விட்டனர். இதற்கெல்லாம் சிகரம் வைத்தால் போல தமிழ் வீரப்பெண்கள் மண்மீட்புப் போரில் வீரவேங்கைகளாகப் புறப்பட்டு வெற்றிவாகை சூடிய வரலாற்றினை இவ்வுலகம் மறக்காது. அடுப்பங்கரையில் கிடந்த தமிழ்ப் பெண்கள் ஆயுதங்களுடன் எதிரியை வெற்றி கொண்டு தமிழ் மண்ணை மீட்பது அளப்பரிய சாதனையே.

இருந்தாலும் பெண் விடுதலை என்ற பெயரில் பெண்கள் மேலைத்தேய நாடுகளில் மார்பு உள்ளாடை-களை கழற்றி எறிந்து வீதியில் ஆர்ப்பாட்டம் செய்வதால் என்ன லாபம்? பெண்விடுதலை என்பதனை நல்வழிகளுக்கு பயன்படுத்த வேண்டும். எங்களுக்கு சுதந்திரம் இருக் கின்றது. அதனால் நாங்களும் ஆண்களைப் போல் பல பேருடன் தொடர்பு கொள்ளலாம் என பெண்கள் நினைத் தால் சமூக கலாச்சாரம் அழிந்துவிடும். ஆண்களினால் பெண்கள் ஆட்கொள் ளப்படுவது முற்றிலும் நிறுத்தப்பட வேண்டும். அதற்கு ஒவ்வொரு ஆணும் பெண்களை மதிப்பவராகவும் அவர்களின் கருத்துக்களை கேட்பவர்க ளாகவும் இருந்தால் பெண் அடிமை என்பதே இல்லாது போய்விடும்.□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு சமுதாயத்தின் வாழ்வை வழிநடத்தவை மதங்களின் பொறுப்பில் முக்கிய பங்கு மதங்களும், இருப்பதை யாரும் மறுத்து வாதிட முடியாது. அனைவரை கலாசாரங்களின் ஆட்டம் கண்ட தூங்கோ, ருமேனியா, செக் சோஸ்லோவாக்கியா, போலந்து, ஹங்கேரியா, அல்பானியா போன்ற நாடுகளில் மத ஸ்தாபனங்கள் ஜோடாக சமூட்ட முடன் பல கூயிரக்கணக்கான மக்களின் சுயநிந்தம் பயன்படுத்தப்பட்டது. கிழக்கு ஐரோப்பா நாடுகளில் மதங்கள் குறிப்பாக கத்தோலிக்க மதம் புனிதோறுது கம்யூனிச ஆட்சியை நிலைகுலைய வைப்பதற்கு மனித பலத்தை நேரடியாக பயன்படுத்தி உள்ளது. மத சுதந்திரம் என்ற போர்வையினுள் அரசியல் நோக்கங்கள் புகுத்தப்பட்டன. இந்த சிக்கலான சூழ்நிலையை புரிந்து கொள்ளாமல் கம்யூனிச நாடுகளை விடுத்து, சீனா வடிய நாடுகள் எதிர் கொள்கை அரசியலை எச்சரிக்கவேண்டும். சீனி போன்ற மத்திய அமெரிக்க நாடுகளில் அமெரிக்காவின் தலையீடு தொடர்ந்தாலும் நீண்ட வலதுசாரி சர்வாதிகார ஆட்சியை அதிகரிக்கும் மதத்தின் பலம் பயன்படுத்தப்பட்டது.

எனவே பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் வன்முறை மிருகமான அரசியல் நிலைப்பாடுகளை கொண்டுள்ள சந்தர்ப்பங்களை தமது அரசியல் நலன்களுக்காக மாற்றி மதத்தை கையாள முனைந்துள்ளன. மாறாக, மறுதலையில் ஒரு நாட்டின் அரசியலமைப்பை நிராகரிப்பதன் மூலம், மக்களின் வாழ்க்கை முறையை மாற்றுவதன் மூலம் அரசியல் மாற்றம் அதி முக்கிய பங்கு வகிக்கின்றன. சமூக சமூகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதிலும் மாற்றம் ஏற்படுவதிலும் சமய ஸ்தாபனங்களும் கலந்து கொள்ள வேண்டுமென்பதும் அரசியலில் மாற்றம் ஒரு முக்கிய முடியாத விடயம் குறிப்பிடுகின்றது.

அரசியலும் மதம் மற்ற அனைத்து மாற்றத்தை தான் தாக்கியது முழுப்பிரச்சனையே தான் புள்ளது. இந்தியாவில் சிலசமயம் இயக்கமும் பலரின் மனங்களில் ஆழமாக இடம்பெறும் சராசரியின் சதாம் ஹுசைன் ஈராக்கிலும் இராணுவ மறுமும் மனித குலத்தின் பெரும் பகுதியினரை கொன்று குவித்துள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை முக்கிய மத ஸ்தாபனங்கள் அரசியலில் ஈடுபட்டு தமது அதிகாரங்களை வளர்ப்பதற்கு முயலவில்லை. தனிப்பட்ட சொந்த லாபங்களை அனுபவிக்கக் கூடியதாக உள்ளது. இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்களில் பெரும்பான்மை பௌத்த மதம் இலங்கையின் வரலாறு முழுவதும் தமிழ் பௌத்தர்களின் மேலாதிக்கத்தை நிலைநாட்டி வந்துள்ளது. இந்த பிரதேசத்தில் பௌத்தத்தை பாதுகாக்கும் பொறுப்பு சிங்களவர்களுக்கு மட்டுமே உரியது என்ற கருத்து நிலவுகின்றது. பௌத்த மதத்தின் தலைமைத்துவமும் சிங்கள பௌத்த மதத்தின் தலைமைத்துவமும் ஒன்றாகவே இருந்து வருகின்றது. இலங்கை ஒரு முஸ்லிம் நாடாகவோ அல்லது சிங்கள நாடு என்ற பொறுப்பாளராக இருந்து தேரோக்களின் அரசியல் சூழ்நிலை இரு முஸ்லிம் மாணவர்களை கேட்டுக்கொண்டதற்கு முஸ்லிம் கூறப் போவதாக தமது பிரதிநிதித்துவத்தையும் கூறிக்கொண்டதும் பௌத்த தர்மத்திற்கும் பௌத்த சித்தாந்தங்களுக்கும் மாறாகவே பல வடக்க காலமாக பௌத்த மதத்தின் நலன்களைப்பற்றி செயற்பட்டு வருகின்றது.

தென்பகுதி இருந்தாலும் சமுதாய அளவிலும் பௌத்தமான அரசியல் கட்சிகளிலும்தான் பௌத்த மதகுருமார்களின் ஈடுபாடு மிகவும் ஆழமாகவும் பலமாகவும் உள்ளது. இவ்வாறு பௌத்த மத பீடம் ஒரு பலம் வாய்ந்த அமைப்பாக இருக்கின்ற போதிலும் அதனால் வடிவத்தாய்களின் அரசியல் அழிவினையையும் தழுவிய மனப்பான்மையும் இனத்துவேஷமும் முழு சமூகத்தையும் ஒரு தாய நோக்கமற்ற குப்பையாக வளர்த்துள்ளது.

தமிழ் சிங்கள இனப்பிரச்சனையை தீர்ப்பதற்காக அவ்வப்போது அரசியல் தலைவர்களினால் வகுக்கப்பட்ட உடன்படிக்கைகளுக்கு மகாநாயக்க தேரோக்களின் ஆசி கிடைக்காத காரணங்களினால் அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது கிழித்தெறியப்பட்டன. அத்துடன் தனிச் சிங்கள சட்டமூலத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சியினரால் நடத்தப்பட்ட சாத்வீகப் போராட்டங்களை முறியடிப்பதற்கும் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை ரத்து செய்யுமாறு கண்டி தலதாமாளிகைக்கு ஜே ஆர் உடன் கைகோர்த்து ஊர்வலம் போனவர்கள் பௌத்த குருமார்கள். 1950, 1960 க்களில் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தால் தற்போது ஏற்பட்டுள்ள கோடிக் கணக்கான பொருட் சேதங்களையும் ஆயிரக்கணக்கான உயிர்ச் சேதங்களையும் நிச்சயமாகத் தவிர்த்திருக்கலாம். இதன் மூலம் பௌத்த மதமும் சிங்கள இனமும் நிச்சயமாக தலைநிமிர்ந்து வாழ்ந்திருக்கும் (இன்றைய நிலையை விட!).

தமிழ் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்ட முறையில் நடாத்தப்பட்ட அனைத்து சிங்கள குடியேற்றத் திட்டங்களுக்கும் பின்னணியில் பௌத்த குருமார்களின் பங்கு ஆழமாக உண்டு. இக்குடியேற்றங்கள் அனைத்தும் சிங்கள மொழியினதும் பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது எனவும் குடியேற்றத் திட்டங்கள் நடைபெறாவிடின் சிங்கள மொழியும் பௌத்த மதமும் அழிந்து விடும் என்றும் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஸ்ரீலங்காவின் அரசியலில் கடந்த ஆண்டுகளில் பலத்த சூறாவளி ஏற்பட்ட போதும் அது பௌத்த இன வெறியை சிந்திக்க வைத்ததாகத் தெரியவில்லை. இனத்துவேஷமும் பச்சை பாசிச கோணங்களும் முக்கிய பௌத்த தேரோக்களிடம் இருந்து வரும் போது சாதாரண பிக்குகளும், அவர்களைச் சார்ந்த ஸ்தாபனங்களும் இனவெறியைப் போதிப்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. சிங்கள மக்களையும் நாட்டையும் குட்டிச் சுவராக்கியதில் ஸ்ரீலங்காவின் பௌத்தமத பீடத்திற்கு ஆகக் குறைந்தது 75 சதவீத பங்கு உண்டு என்று தான் கூற வேண்டும்.

பௌத்த மதத்திற்கு அடுத்ததாக இலங்கையில் அதிகார பலம் கொண்ட மதமாக கிறிஸ்தவ மதத்தை அதிலும் குறிப்பாக கத்தோலிக்க மதத்தைக் குறிப்பிடலாம். கத்தோலிக்க மதத்தை எடுத்துக் கொள்வோமாகில் வட-கிழக்கு மேற்றாசனங்கள் கொழும்பு மைய கத்தோலிக்க தலைமைப் பீடத்துடன் கருத்து ரீதியாக எப்போதோ பிரிந்துவிட்டன. கொழும்பில் உள்ள கத்தோலிக்க தலைமைப்பீடம் தமிழர் பிரச்சனைகளில் கண்டும் காணாத விதமாகவும் பல சந்தர்ப்பங்களில் பௌத்த சமய தலைமைப்பீடங்களுக்கு நிகரான இனத்துவேஷ நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளன.

போதிய அதிகாரப் பலமும் அமைப்புப் பலமும் வெளிநாடுகளின் தொடர்பும் கத்தோலிக்க மதத்திற்கு இருக்கின்ற போதிலும் மத தலைப்பீடம் தமது அமுக்கத்தை இனப்பிரச்சனையில் பயன்படுத்தவில்லை. சுருக்கமாக கூறப்போனால் சரியானதைக் கூறி கெட்ட பெயரை சம்பாதிப்பதை விட பார்த்தும் பாராமல் இருப்பது மேல் என்ற அணுகுமுறை. வடகிழக்கு மாகாணங்களில் உள்ள கிறிஸ்தவ, கத்தோலிக்க ஸ்தாபனங்களும் குருக்களும் வெளிநாட்டு தொண்டர் ஸ்தாபனங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி பல பராமரிப்பு, அகதிகள் கவனிப்பு போன்ற தொண்டு வேலைகளை புரிந்து வருகின்றனர். கொழும்பை தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் கிறிஸ்தவ கத்தோலிக்க தலைமைப் பீடங்கள் மனம் வைத்தால் சிங்கள தமிழ் இனப்பிரச்சனைக்கு ஒரு நியாயமான நடுவர்களாக இருந்திருக்க முடியும்.

ஆனால் துரதிர்ஸ்டவசமாக அரசியலைப் போல் மதமும் பெரும்பான்மையான இனத்தை குறைகூற விரும்பவில்லை. பெரும்பான்மை இனத்தின் எதிர்ப்பை சம்பாதிக்க விரும்பவில்லை. இதனால் பல சந்தர்ப்பங்களில் பெரும்பான்மையினருடன் இணைந்தும் சில சந்தர்ப்பங்களில் மதில் மேல் பூனையாக இருந்தும் கிறிஸ்தவ கத்தோலிக்க மத தலைமைப் பீடங்கள் முதுகெலும்பில்லாத பிறவிகளாக முடங்கிக் கொண்டன. என்றோ ஒரு நாள் மனித குலத்திற்கு மீட்சி வரப் போவதாகவும் மறுபிறவியில் நாங்கள் அனைவரும் மோட்சத்தில் இறைவனுடன் இணையப்போவதாகவும் கதை அடிப்பதிலேயே கிறிஸ்தவ கத்தோலிக்க மதங்கள் தமது நேரத்தை செலவழித்தன.

மூன்றாவதாக இந்து மதத்தைப் பொறுத்தவரை இலங்கையில் அது என்றும் ஒரு செல்வாக்கான ஒரு மதமாக இருந்ததும் இல்லை. இருக்கப்போவதும் இல்லை. அரசியலைப் பொறுத்தவரை இந்து மதத்தின் ஈடுபாடும்

மதமும் மக்களும்

பிரித்தானியா

64 வீதமான பிரித்தானிய மக்கள் தாம் கிறிஸ்தவர்கள் என்கின்றனர்.

இவர்களில் ஏழில் ஒருவர் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களாக உள்ளனர்.

மூன்றில் ஒருவர் மறுபிறப்பு இல்லை என்கின்றனர்.

பிரித்தானியாவில் 360,000 இந்துக்கள் வாழ்கின்றனர்.

1.5 மில்லியன் இஸ்லாமியர்கள் பிரித்தானியாவில் உள்ளனர்.

புத்தசமய அமைப்பில் 6,000 உறுப்பினர்கள் உள்ளனர்.

இலங்கை

மக்கள் தொகை 19,146,000

பௌத்தர்கள்
69% — 13,210,000

இந்துக்கள்
15% — 2,872,000

இஸ்லாமியர்கள்
8% — 1,532,000

கிறிஸ்தவர்கள்
8% — 1,532,000

இலங்கையில் உள்ள புத்த விகாரைகளில் 39,000 பிக்குமார்களும் பிக்குனிகளும் பணிபுரிகின்றனர்.

உலகம்

கிறிஸ்தவர்கள் 1,667 மில்லியன்

இஸ்லாமியர்கள் 881 மில்லியன்

இந்துக்கள் 663 மில்லியன்

பௌத்தர்கள் 312 மில்லியன்

சீன பாரம்பரிய மதத்தவர்கள்
172 மில்லியன்

பண்டைய மதத்தவர்கள்
92 மில்லியன்

யூதர்கள் 18 மில்லியன்

சீக்கியர்கள் 17 மில்லியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரவதை தொடர்கிறது ஆனால் யாரும் தண்டிக்கப்படவில்லை

சர்வதேச மன்னிப்புச் சபை தனது வருடாந்த அறிக்கையில் வெளியிட்ட 2000ம் ஆண்டிற்கான அறிக்கையில் இலங்கை குறித்து கூறியுள்ளது. சித்திரவதைகளில் ஈடுபட்ட அதிகாரிகளையோ பாதுகாப்பு படையினரையோ தண்டிக்க தவறிவிட்டதாக குற்றஞ்சாட்டி உள்ளது. வன்முறை நிலைமைத்திலும் சரியே. அரசாங்கம் இரண்டு முக்கியமான அடிப்படை சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற செயல்கள் இ ற்றையதாக குற்றஞ்சாட்டப்பட்டு உள்ளது. பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் பெயரில் பாதுகாப்பு படைகள் 1,500 மேலான மக்களை அல்லது தாக்கல் செய்யாமலேயோ சிறையிலடைத்து சர்வதேச மன்னிப்புச்சபை பாதுகாப்பு படையினரை குற்றஞ்சாட்டியிருக்கிறது.

மற்ற ஆண்டு அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்குமான போருக்கு இடையில் 150 மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டு உள்ளனர். இலங்கை அரசாங்கமோ விடுதலைப் புலிகளை போர் மீறல்களுக்கு ஏறத்தாழ இருபதுக்கும் மேற்பட்டோரை செயற்படுவதாக இந்த தாக்குதலையும் அவர்களை சாடியுள்ளது. மேலும் தொடர்ந்து வன்முறையால் 2000 ஜனவரியில் 10,000 ஆக இருந்த இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை அவ்வாண்டு முடிவில் 570,000 அதிகரித்தது இருக்கிறது.

விடுதலைப் புலிகள் முன்னேற் தோறும் பிரசாரத்தின் போதும் வேறு சந்தர்ப்பங்களிலும் சிங்கள பொதுமக்கள் கொல்லப்படுவதை வழமையாய் இருந்தது. 2001ம் ஆண்டு அறிக்கையில் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. இராணுவத்தினை மட்டக்களப்பில் சுட்டுவிழ்த்து வீழ்த்தி பொதுமக்கள் இருந்த 17 பேரை மக்களின் 9 சிறுவர்களும் அடங்குவர். மீது பழி தீர்க்கும் 27 இளம் அரசியல் கைதிகள் கண்டாவளையில் சுட்டுக் கொல்லப்பட்டதும். இராணுவத்தினரால் பொறுப்பளிக்கப்பட்ட பகுதியில் கண்ணிவெடிகளை சர்வதேச மன்னிப்புச்சபை கண்டுபிடித்து அறிவித்திருந்தது.

நீண்டகால முறையில் இலங்கை தமிழ் காவிரன் தலைவர் குமார் பொன்னம்பலம் கொலைசெய்யப்பட்டதை சுட்டிக்காட்டிய அறிக்கை எவரையும் குறிப்பிட்டு குற்றஞ்சாட்டவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரபின் கொலைக்கு 10 மக்கள் ஐனநாயக முன்னணியை சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் அரசியற்கு திரும்பிவரும் இவ்வமைப்புகளும் முஸ்லிம் காங்கிரஸ் பலரிலும் பெரும்பாலான மனித உரிமைகள் பிரச் சம்பவங்களிற்கு காரணமாக இருப்பதாக குறைகூறுகிறது.

இருபதாம் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் சிறுவர்களை பற்றாக்குறை படுத்துவதாகவும் 12 வயதுச் சிறுவர்கள் சண்டையிட்டதாகவும் அவர்களை கண்காணிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழுகையும் புலம்பலும் என்று தான் சொல்ல வேண்டும். இதைத் முக்கிய வரலாற் இலங்கையில் இந்து மதம் என்ற தலை ஒரு அவசியமாக மாற்றிக் கொள்ள தான் வேறு அடையாளங்களை. புலம் செய்யும் பிரமாணங்கள் வேறு அடிப்படைகளை கொண்டு பாரம்பரியமான கோவில் கொடுக்கல் வாங்கல் பலம் சேர்ப்பதிலும் இன்ற தளத்தையும் கருத்துரைக்க இருந்து வந்திருக்கின்றனர். நல்லை குமரன். தங்களுடைய கூப்பாடுகளும் ஆரவாரங்களின் முடிவுகளில் சில முக்கிய கோவில்களை மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டதுடன் அவற்றிலிருந்து பிரதான பல பலரும் பல பலரும் இடைக்கிடையாக இந்த மதத்திற்கு குரல் கொடுக்க முன்னால் அமைச்சர் இராஜதுரையினால் சில முயற்சிகள் எடுக்கப்பட்டு பிரதானமாக அவற்றிற்கு சரியான ஒழுங்கமைப்பு அமைக்கவில்லை. எனவே கோவிலை அடிப்படை களில் அமைக்கப்பட்ட இந்து அமைப்புக்கள் தொன்மை கோவிலையே அதன் முகவரியும் கொண்டமைத்திருப்பதாக, தருமகர்த்தா சபை என்று அல்லாமல் தொன்மை சில அவற்றிலிருந்து தலைமைத் மதத்தை பல் இழக்கச் செய்தும் சமாதானத்தை பிரிதும் வைத்துள்ளன.

ஆரம் மோதலாகவும் மக்களிடம் இலங்கை சரித்திரத்தில் கொள்ள மதம் இனரீதியான அரசியலாகவும் கிளர்ந்தது, கத்தோலிக்க வழிபாடுகளை முன்னெடுப்பதோடு மதங்களையும் இந்து மதம் முன்னெடுப்பதோடு சமாதான மாற்றத்திற்காக முதலாளிகளின் பிரதானமாக பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. இருதரப்பு மதங்களும் நாட்டின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் கூட நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.



சர்வதேச மன்னிப்புச்சபையின் சர்வதேச அறிக்கை 2001

61 நாடுகளில் சட்டவிரோதமான கொலைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

30 நாடுகளில் மக்கள் காணாமல் போய் உள்ளனர்.

125 நாடுகளில் பாதுகாப்பு படைகள் சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ளனர்.

64 நாடுகளில் தடை அரசியல் பங்கேற்பதற்காக மக்கள் சிறையிடப்பட்டு உள்ளனர்.

28 நாடுகளில் 1,457 கைதிகளிற்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு உள்ளது. 65 நாடுகளில் 3,058 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

42 நாடுகளில் ஆயுதக் குழுக்கள் கொலைகளை மேற்கொண்டு, கடத்தியும், சித்திரவதை செய்தும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைவாதியும் வழக்கறிஞரும் பிரித்தானிய அகதிகள் அமைப்பின் இலங்கை திட்டப் பிரிவின் இணைப்பாளருமான திரு விஜயபாலனுடன் ஓர் சந்திப்பு. இவர் கடந்த 16 ஆண்டுகளாக அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. திரு விஜயபாலன் அவர்களை வக்சோலில் உள்ள பிரித்தானிய அகதிகள் அமைப்பின் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினேன்.

விஜயபாலன் - தேசம்

த ஜெயபாலன்

தான் இளைஞராக இலங்கை தொழிலாளர் காங்கிரசில் செயற்பட்டதையும் தான் இலங்கையில் சட்டம் பயின்றதையும் பின் பிரித்தானியாவில் பயிற்சி பெற்றதையும் தனது மலரும் நினைவுகளாக மகிழ்வுடன் அசை போட்டார். இளைஞனாக இருந்த வேளையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுத்து பழகி விட்டேன். இன்று இலட்சக் கணக்கான தமிழர்கள் தமது அடிப்படை உரிமைகளை இழந்து தவிக்கிறார்கள். அவர்களுக்காக என்னால் இயன்ற உழைப்பை வழங்குவதில் ஆத்ம திருப்தி கிடைக்கிறது. அதனால் இத்துறையில் ஈடுபட்டுள்ளேன். மேலும் 1983 இனப் படுகொலையில் எனது ஆறு உறவினர்களை இழந்து நானும் பாதிக்கப்பட்டவனாக இருக்கிறேன் என்று சோகம் கலந்த சாந்தத்துடன் கூறினார்..

1984ல் பிரித்தானியாவிற்கு புலம் பெயர்ந்து, அதிலிருந்து 1987 வரை தமிழர் தகவல் நடுவத்தில் பணியாற்றியதாகக் குறிப்பிட்டு, மேலும் தொடர்ந்தார். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து சமாதானம் தோன்றிவிட்டதாக எண்ணி தமிழர் தகவல் நடுவம் மூடப்பட்டுவிட்டது. சிலர் ஊருக்குப் போகவும் ஆயத்தமானார்கள். போனவர்களும் இருக்கிறார்கள் என்று ஆச்சரியத்துடன் குறிப்பிட்டார். "தமிழர் தகவல் நடுவம் எதிர்பார்த்தது போல் நிலமைகள் அமையவில்லையே" என நான் குறுக்கிட்டேன். அதனால் தான் பிரித்தானிய அகதிகள் அமைப்பினால் இலங்கைத் திட்டம் 1987 டிசம்பரில் ஆரம்பிக்கப்பட்டது என்று குறிப்பிட்டார். அது பற்றி விளக்கிக் கூறுகையில், அரசு சார்பற்ற நிறுவனங்களான British Refugee Council, Amnesty International, UNHCR ..... போன்றவற்றிற்கு தமிழர் தகவல் நடுவம் மூடப்படும் வரை அது தான் தமிழ் மக்கள் பற்றிய செய்திகளை பக்கச் சார்பு இன்றி வழங்கி வந்தது. பின்னர் அது மூடப்பட்டதும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து பிரித்தானிய அகதிகள் அமைப்பில் உருவாக்கிய தகவல் பிரிவு தான் இலங்கைத் திட்டப் பிரிவு என்றார்.

"இந்த இலங்கைத் திட்டத்தின் நோக்கம், செயற்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள்....." என்று ஆரம்பித்தேன். ஓர் புன்னகையை தவழவிட்ட படி, பிரச்சினை தீரும் என்ற எண்ணம் இல்லையோ என்று என்னை திருப்பிக் கேட்ட படி தொடர்ந்தார். இந்த இலங்கைத் திட்டம், இனப்பிரச்சனை உள்ள வரை மட்டும் தான். பிரச்சினை தீர்க்கப்பட்டதும் திட்டம் மூடப்படும். இப் பிரச்சினை தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் எம்மிடம் எதிர்காலத் திட்டம் எதுவும் இல்லை என்று சிரித்த படி பதிலளித்தார். இலங்கைத் திட்டத்தின் நோக்கம் தமிழ் மக்களின், குறிப்பாக இலங்கை வாழ் தமிழ் மக்களின் உண்மை நிலையை வெளிக் கொண்டு வருவது. பிரித்தானிய அகதிகள் அமைப்பின் தொடர்பாடல் பிரிவில் தகவல் பிரிவு, போராட்டப் பிரிவு என இரண்டு அங்கங்கள் உண்டு. தகவல் பிரிவின் கீழ் வரும் இலங்கைத் திட்டம் தமிழ் மக்களுடைய உண்மை நிலையை சேகரித்து வழங்க, போராட்டப் பிரிவு அதனை பிரச்சாரப்படுத்தி முடிவுகளை எடுக்கும்; அரச மற்றும் அமைப்புகளுக்கு சிபாரிசுகளையும் அழுத்தங்களையும் கொடுக்கும் என்று இலங்கை திட்டத்தின் நோக்கம் செயற்பாடு பற்றி விளக்கிக் கூறினார்.

இலங்கைத் திட்டத்தின் கீழ் சேரிக்கப்படும் தகவல்கள் 1988 பெப்ரவரியில் இருந்து The Srilanka Monitor ல் மாதம் ஒரு முறை வெளியிடப்படுகிறது. இன்று சர்வதேசரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, தமிழ் மக்களின் பிரச்சனையை வெளிக் கொண்டுவரும் ஒரே செய்தி ஏடு இது தான். போராட்டத்தில் ஈடுபட்டு உள்ள தரப்பினர்கள் கூட விரும்பியோ விரும்பாமலோ அதனை ஏற்றுக் கொண்டு உள்ளனர். இன்று உலகின் பல பாகங்களில் தஞ்சம் கேட்கும் தமிழ் மக்களின் ஒரே சாட்சியாக இருப்பதும் The Srilanka Monitor தான் என்று பெருமையுடன் கூறுகிறார் அதன் தலைமையாளரான திரு விஜயபாலன். மேலும் தொடர்கையில் ஐரோப்பிய சமூக நாடுகள் உட்பட அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா என இன்னும் பல நாடுகளின் நீதிமன்றங்களில் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பதாக கூறித் தன் தொழிலில் தான் ஆத்மதிருப்தி அடைவதை தன் முகத்தில் காட்டினார். The Srilanka Monitor இன் பிரதிகள் வேண்டுமானால் The Srilanka Monitor, The British Refugee Council, 3/9 Bond Way, London, SW8 1SJ என்ற முகவரி உடன் தொடர்பு கொள்ளுங்கள். தொலைபேசி இலக்கம் 020 7582 6922, தொலைநகல் இலக்கம் 020 7582 9929.

இலங்கையில் சமாதானம் மலர வேண்டும் என்பது தான் எமது ஆவல். ஆனால் வந்த அரசியல் செயற்பாடுகளிலும் நாம் ஈடுபடமாட்டோம். எமது நடு நிலையைப் பேணுவது எமது தலையாய கடமை எனப் பொறுப்புடன் தெரிவித்தார். இப்போது பேசப்படும் பேச்சு வார்த்தை குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள் என கேட்டதற்கு இது மிகவும் ஆரம்ப கட்டம். இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் சாதிக்கவே முடியாது. நான் எப்போதுமே விரும்புவது புதுதத்தில் சுடப்பட்டவர் ஒரு தாயிற்கும் இடையில் மிதந்த வீரிசல் ஏற்பட்டு உள்ளது. மேலும் மத்திய கிழக்கில் நோர்வே, நிலைத்த சினைவ் ஏற்படுத்தை முயற்சித்தது போன்று நிலை இலங்கையில் இல்லை. வழமை போல் நிலைமைகளை எடை விரும்பிருந்தது பாதகமாக இருப்பதாகவே தனக்குத் தெரிவதை எடுத்துக் கொண்டார்.

"நான் பெரும் தேசங்களில் இருந்து வெளி வருகின்ற சில தமிழ் பத்திரிகைகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பக்க சார்புள்ள நடவடிக்கை பற்றி குற்றம் சாட்டி உள்ளனரே அது பற்றி உங்கள் கருத்தென்ன?" என்று கேட்டேன். இது அரசாங்கத்து அரச சார்புள்ள நிறுவனங்கள் பற்றிய தெளிவினையாள் தான் ஏற்படுத்த வேண்டும். உதாரணத்திற்கு மாவிலாறு மனிப்புச் சுவரை எடுத்தாள். அவர்கள் அரிசல் கைதிகள். அவர்களின் வழக்குகள், சிறுநிலைகளும் மறை தடைகளையும் போன்ற விடயங்களிலேயே கவனம் செலுத்துவார்கள். அது சம்பந்தப்பட்டது தான் அவர் கருதுவது இல்லை. சர்வதேச மன்னிப்புச் சபை உண்மை நிலவரங்களை போன்றவற்றில் நடுநிலைமை. இப்படித் தான் நாமும் அமைப்புகளும். முன்னைய அமைப்பும் தனக்கு சில முக்கிய வரையறைகளைக் கொண்டு இருக்கும். அதற்கு வெளியில் அவர்கள் செயற்படமாட்டார்கள். இதனை எமது தமிழ் பத்திரிகைகள் புரிந்து கொள்வதில் தான் அவர்கள் மீது குற்றச்சாட்டை வைக்கும் உள்ளான காரணம் வெளிப்படுத்தினார். தீர்வு நோக்கி முன்னேற்றம், திரு குமார் பொன்னம்பலம் இருவருடைய அரசியல் பிரதேசங்களிலும் வேறுவேறு அளவில் பாதிப்படைந்து உள்ளது பற்றிக் கூறும் போது, அது தான் சார்ந்து நிறுவனங்களின் கொள்கையில் ஏற்பட்ட தவறு என்றும் அவ்வாறானவர்களுக்கு இந்த தவறு ஏற்படாது இருப்பதற்கும் எதிர்காலத்தில் இப்படி ஏற்படாது என அவர்கள் சரியாக வளர்ந்துள்ளதாகவும் கூறினார்.

சமாதான பக்கத்தில் ஏற்பட்ட மோசமான பாதிப்புக்கள் உள்ளன. அதனால் இன்று வரை இருந்து கொண்டிருக்கின்ற பிரச்சனைகள் மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகளை எல்லாம் எடுத்து விவரித்தார். இது மிகவும் பிரமாண்டமான சர்வதேசரீதியாகக் கண்டறியான அமைப்புகளின் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் மேலும் அந்த அமைப்புகளை சாதகமாக்கி பயன்படுத்துவதால் சர்ச்சைகள் இல்லாமலேயே போய்விடுகிறது. ஆனால் அவர்களிடமோ, நிபுணத்துவ மனித நாடுகளுக்கு இல்லை. இதனால் அதிகாரம் மறுதலிப்பதாகப் பலவும் பேசுவதை நிறுத்த. சில அமைப்புகள் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகக் கூறினார். அவர்கள் இலங்கையில் புதிய மாற்றம் ஏற்படுத்தியதாகவும் செய்தார்கள், கொஞ்ச பேரை மட்டும் இருந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க மனித உரிமை அமைப்புகள் முன்னுரை என்ன? என்று கேட்டேன். அதற்கு தற்போது அவர்களுக்கு கிடைக்குமாயின் நிச்சயம் பிரித்தானிய மட்ட முறைகளுக்கு அமைய நடவடிக்கை எடுப்பார்கள் என்று கூறினார். "இன்று இலங்கையில் தமிழ் மக்களின் மனித உரிமைகள் பற்றி நீங்கள் என்ன மதிப்பீடு வைத்து உள்ளீர்கள்" என்று கேட்டேன். இதற்கு அவர் சொன்னதை மட்டும் இன்னும் சிந்தனையை தூண்டுவதாகக் கூறுகிறது. இதற்கு மேல் ஆராயவும் கூற வேண்டியது இல்லையே என்றார்.

இடையே எமது சந்திப்பை முடிவிற்கு கொண்டு வர எனது முன்னாள் கேள்விகளுக்குச் சென்றேன். இலங்கை தமிழ் மக்களாகிய நாம் என்ன நினைக்கிறோம் என்பதை கேட்டறிந்து நின்றேன். பொதுவான முதல் பதிலாக எந்தவித பிரச்சனைகளுக்கு நிரந்தர அமைப்புகளாக சர்வதேச நோக்கோடு செயற்பட்டால் எதிர் காலம் சாதகமாக அமையும் என்று இருதலைச் சாரகமாகக் கூறி முடித்தார். "இலங்கை இன பிரச்சனையை தீர்வதற்கு பிரதானமாக எமக்கு சமாதானம் என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறீர்கள்" என்றேன். தனித்து ஒரு நாடு இப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது. பிரித்தானியா சர்வதேசரீதியில் கட்டுப்படுத்த ஜப்பான் தான் கொடுக்கும் சர்வதேச இரண்டு மடங்காக்கும். ஐரோப்பிய மற்ற நாடுகள் சர்வதேச சமூகத்துடன் இணைந்து இப் பிரச்சினைக்கு தீர்வு காண பக்கத்தில் செயற்பட்டு சர்வ இரு தரப்பையும் நிர்ப்பந்திக்க வேண்டும். இல்லை யேடலின் முடிவாக "தமிழ் மக்களின் குரலாக ஜனநாயகம் ரீதி என்ன நினைக்கிறீர்கள்" என்று கேட்டு இந்த நீண்ட உரையாடலை நிறைவுக்கு கொண்டு வந்தேன். இப்போது தமிழ் மக்களுக்கு அரசியல் ஞானமும் இல்லை என்பது தான் எனது கணிப்பு ஆனால் தமிழ் மக்கள் மனித உரிமைகளுடன் வாழ வழி செய்யப்பட வேண்டும் அதற்காக தேசம் எடுக்கின்ற, நம பங்களிப்பை வழங்க முழுத்திற்கு வழங்க வேண்டும் என்று கூறி உரையாடலை முடிவுக்குக் கொண்டார்.

தமிழ் மக்களின் மேல் நாடுகளில் மேற்படாத மனித உரிமைகள் பற்றி அந்த உரையாடல் அமைந்தாலும், தன் 16 ஆண்டு காலப் பணியில் இப்புறமாக ஒன்றை வழங்கலாம், எமது வாசகர்களிற்கு இந்த பற்றுப்பாதையை ஏற்படுத்தி தந்தமைக்கும் திரு விஜயபாஸ்கரனுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு விடைபெற்றோம். (இச்சந்திப்பு கடந்த ஆண்டு பிரித்தானிய அகதிகள் அமைப்பில் இடம்பெற்றது)

Sri Lanka Monitor ற்கு சந்தா செலுத்தி பெற விரும்புவோர் மேற் விபரப்படிவத்துடன் கீழ் வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

The Sri Lanka Project
The Refugee Council
3 Bond Way
London
SW8 1SJ

Tel 020 7820 3100
Fax 020 7820 3107
e-Mail slproject@refugeecouncil.org.uk
www.gn apc.org/brcslproject

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத் தீயை மூட்டிய சுதந்திரம்

நெடுந்தீவு — சுரேஸ்

சுதந்திர இலங்கையின் வயது 53. இந்தியாவே போய்விட்டது இனி இலங்கையை வைத்து என்ன செய்வது என்ற நிலையில், பிரித்தானிய காலனித்துவ வாதிகள் தாமாக முன் வந்து இலங்கைக்கு சுதந்திரம் வழங்கினர். ஆனால் சுதந்திர இலங்கையில் ஆரம்பத்தில் இருந்தே இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான வன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இவ்வன்முறைகளின் மொத்த வெளிப்பாடாக 1983 யூலைக் கலவரம் அமைந்தது. சர்வதேச அரங்கத்தின் பெரும் கண்டணங்களுக்கு உள்ளான இனப்படுகொலைச் சம்பவங்கள் இலங்கை வரலாற்றின் மிகப்பெரும் திருப்பு முனையாக அமைந்தது. தமிழ் மக்கள் தனிநாடு ஒன்றே வழியென்ற முடிவிற்கு வர நிர்ப்பந்திக்கப்பட்ட வரலாற்று நிகழ்வு இது என்றால் அது மிகையல்ல.



இலங்கைப் பாராளுமன்றத்தை பாதுகாக்கும் கடமையில் இருக்கும் ஸ்ரீலங்கா இராணுவ வீரன்

கருப்பு யூலை என நினைவு கூரப்படும் 1983 இனக்கலவரங்களிலும் மோசமான பல சம்பவங்கள் பிற்காலத்தில் நடந்தேறி உள்ளன. ஆனால் 1983 யூலைப் படுகொலையே இவை எல்லாவற்றிற்கும் அடி எடுத்துக் கொடுத்தது. 1983 இனப்படு கொலைகளில் 3,000 அப்பாவித் தமிழ் மக்கள் வெட்டியும், உயிருடன் தீயிடப் பட்டும் கொல்லப்பட்டனர். 15,000, தமிழர்கள் அகதி களாக்கப்பட்டனர். கடந்த 18 ஆண்டுகளில் இலங்கைத் தமிழ் மக்கள் உட்பட இலங்கையின் அனைத்து இனங்களுமே சொல்லொன்னாத் துயரங்களுக்கு உள்ளா கின. 1983ல் 3,000 படுகொலையுடன் ஆரம்பமான உள் நாட்டு யுத்தம் இன்று 64,000 உயிர்களை பலிவாங்கியும் சமாதானத்தில் இருந்து வெகு தூரத்திலேயே நிற்கிறது.

2003ல் இலங்கை இனப்படுகொலைகளின் 20 ஆண்டுகள் பூர்த்தியாகப் போகிறது. இலங்கை அரசு தன் மீது உள்ள வரலாற்றுக் கறையை துடைக்க விரும்பினால் இலங்கையில் இடம்பெற்ற அனைத்து இனக்கலவரங்கள் பற்றிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். இவ் விசாரணைகள் சர்வதேச அமைப்புக்களால் மேற் கொள்ளப்பட வேண்டும் என்பது மிக அவசியம். இலங்கை அரசு அதனை செய்ய தற்போது முன்வராவிட்டால் இன்னும் சிலகாலங்களில் அது பற்றிய விசாரணைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்படும் என்பதனை சர்வதேச நிகழ்வுகள் காட்டி வருகின்றது.

அன்று குறுகிய அரசியல் இலாபங்களுக்காக தமிழ் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்ட சிங்கள அரசுகள் இன்று அதே வன்முறையை அதே அரசியல் இலாபங்களுக்காக சிங்கள மக்கள் மீதும் கட்டவிழ்த்து விட்டு உள்ளது. சுதந்திர இலங்கையின் 11வது பாராளுமன்றத்துக்கான தேர்தல் அனைத்துத் தார்மீக வரம்புகளையும் உடைத்தெறிந்து வன்முறைப் பாராளுமன்றம் ஒன்றை உருவாக்கிக் கொடுத்துள்ளது. சுதந்திர இலங்கையின் ஜனநாயகத் தேர்தலில் குழுவன்முறைகளால் 50 பேர் கொல்லப்பட்டு இருந்தனர். சர்வதேச மத்தியஸ்தர்களால் தேர்தலின் ஜனநாயகத் தன்மை கேள்விக்கு உள்ளாக்கப்பட்டது. வன்முறை, பயமுறுத்தல், அரசாங்க ஊடகங்களும் வளங்களும் மக்கள் முன்னணியால் கட்சி சார்பாக்கப்பட்டமை, தணிக்கை என்பன சர்வதேச கண்காணிப்புக் குழுவால் சுட்டிகாட்டப்பட்டும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

வெளி உலகில் தங்களை நாகரீகமான அரசியல் வாதிகளாகக் காட்டிக் கொள்ளும் இன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் குறுகிய சிந்தனை கொண் டவர்களேயாவர். பதவிக்காக கொள்கைகளை விற்கும் இவ்வரசியல் வாதிகள் அமைச்சு பதவிகளுக்காக சந்திரிக்கா குமாரதுங்க தலைமையிலான மக்கள் முன்னணியுடன் கூட்டுச்சேர்ந்து உள்ளனர். 250 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட அமெரிக்காவின் அமைச்சரவை 16 அமைச்சர்களையே கொண்டிருக்க, உலகின் சிறிய நாடுகளில் ஒன்றான 18 மில்லியன் மக்கள் தொகையையே கொண்ட இலங்கைக்கு 44 உறுப்பினர்கள் கொண்ட பெரும் அமைச்சரவை மக்கள் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்டு உள்ளது.

உலகம் மிகவும் சுருங்கி தனது எதேச்சதிகாரப் போக்கில் இருந்து மெது மெதுவாக வழுகி ஜனநாயகப் பாதைக்கு அடி எடுத்து வைக்கும் இந்தத் தருணத்தில், ஸ்ரீலங்கா மனித நாகரீகங்களைக் கைகழுவி விட்டு, கொலை வெறி கொண்ட தேசம் என்னும் முத்திரையுடன் செல்ல முனைவது 1956, 1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் நிரூபணப்படுத்தப்பட்டது. இவையெல்லாம் கடந்த கால சம்பவங்கள் இல்லை என்பதை புதிய நூற்றாண்டில் பண்டாரவளையில் (25 ஒக்டோபர் 2000) ஸ்ரீலங்கா மீண்டும் வெளிப்படுத்தியது. இவை எல்லாம் ஸ்ரீலங்கா நாகரீக உலகிலிருந்து தன்னை தனிமைப்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகையும் சாத்தியமாகியது.

நான்கு முனைகளிலும் தலைவிரித்து ஆடும் மரணம் முன்னேறி வந்து கொண்டிருந்தது. அதற்கு மட்டக்களப்பு எம்.பி. ஸ்ரீ சபாரத்தினமோ உதாரணமாக நியமனமுள்ள ஆசிரியர்களைக் குறிப்பிடலாம். பத்தினியம்மாள் நியமனமுள்ள பதினெண்டு கூட தேர்ந்தும் பயனற்றுப் போனது ஒன்றே. இருந்து பயனில்லாமல் அரியம் பிள்ளை எனைக் கொல்ல முனைந்திருந்தும் எதிர்கட்சித் தலைவரும் உள்ள நிலைகளில். வாழ்வுரிமை எனும் தலைவிரித்து ஆடுகிறது. அரியம் தலைவர்கள் வரலாறுகளில் இலங்கையரும் வாழ்வுரிமை இந்த நாட்டின் நீதித்துறையின் இருப்பையே கேள்விக் குறியாக்கி விட்டிருக்கிறது. இவர்கள் தமக்கள் எதிரான சந்தர்ப்பங்களை வெளிநாடுகளுக்கு எடுத்துக் கூறித்த கொண்டு, அந்நாட்டு மக்களை சமாதானப்படுத்தும் தன்னாப்பாப்பது அந்த தேசத்தை, அதன் வளங்களை சிதைத்ததான போகிறது.

அமெரிக்க துணைதூரி கிளிண்டன தனக்கெதிரான பாலியல் குற்றச்சாட்டை முதலில் மறுத்த போதும் பின்னர் நீதிமன்றத்தின் விசாரிப்பிற்குள் இழுத்து நடவடிக்கை முடிவில் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அமெரிக்காவின் வெளளை மாளிகை அதிகாரிகள் மற்றும் அரசு நாட்டின் நீதிபதிகளையும், சட்டத்தரணிகளையும் தனதிடையும் சபை நடவடிக்கை முன்னால் முதல்வரும் தற்போதைய சபை நியமனத்தினால் அவையாளம் காட்டப்பட்டுள்ள கணவர் மற்றும் முன்னாள் கடற்படை தளபதி வரை நிற்க்குவரை தமது பணியில் இருந்து விடுதலைகொடுத்து என்ற பெயரில் இடைவேளை நடந்து கொண்டது. இந்திய ஜனநாயகம் இப்படியில்லை எனலாமே காட்டி நிற்கிறது.

ஸ்ரீலங்காவில் பாராளுமன்ற ஜனநாயகத்தில் விதைக்கப்பட்ட தமிழ் இனவாதங்கள் பற்றிய வரலாறுகளையும் முடிக்கப்படாத பல அத்தியாயங்களையும் கொண்டுள்ள இனவாதங்களின் வளர்ச்சியும் பின்னடைவும் நோக்கப்படுகிறது. தனிப்பட்ட கொள்கைகள் தோற்கடிக்கப்பட்டும் முன்னெடுக்கப்பட்டுமுள்ளன. ஒன்று புலனாய்வு முகவர்களினாலோ இனவாதங்களை போலவோ உருவாக்கப்பட்டவை தமிழ்ப்புலி என்றால் ஆயுத, பொருள், சிறுபான்மை, முதலாளித்துவ விரோதம் இன்றிய வளர்ச்சி, சிந்தனைவடிவு, சிந்தனைகளை வளர்த்தெடுத்தல் சமூகத்தை அறிந்து சாமுதாய அமைப்புகளின் வளர்ச்சியிலிருந்து இலங்கை அரசு உள்ளாகி வருகின்றது.

மனித தாமம், மனித சுதந்திரம் வன்முறை அரசுகளுக்கு எதிரானதாகவும் சமாதான இலக்கை என்பது உலகம் முழுவதும் வாழ்கின்ற மக்கள் அதிகாரமும் இலவாதம் எனும் தூண்டிய வளர்ச்சிகளுக்கு முன்பு சொல்லி எதேச்சதிகாரமாக நடந்து கொண்டது நிறுத்தப் பிரதமர் இலங்கையின் முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து முன்னை நிரந்தர ஏற்றுமைகளுக்கு மாற்றீடாக அனைவரும் நிரந்தரமான முழுமையான மாறும் எதிர் கொள்ளும். இல்லையேல் மரணம் என்பது நாளைக்கு மாற்றம் அல்ல முடிவு நாளாகவும் தான்.□□

வாய்விட்டுச் சிரிப்பதால் நோய்கள் பறந்தோடும்

ஹ்ஹ்ஹ்ஹ்.. ஹிஹ்ஹ்.. ஹ்ஹ்ஹ்.. ஹிஹ்ஹ்.. ஹிஹ்

தொகுப்பு : மரியதாஸன்

பெண் பாவம்: இது எனது மொபைல்?
ஸ்டேஷன் மாஸ்டர்: இல்லை. இது ரெயில்லே எனக்கு சொந்தமானது.

□□□

மனைவி: என்ன விந்தியாசமாக ஒரு பசை கோழி போட்டாலும் மறுநாள் நீலக்கோழியும் முளை உள்ள சொல்ல தொடங்கி வாறாய்.
கணவர்: ஓமோம், விந்தியாசமாய் இருக்குது தான. என்னடை இப்படி இன்னொரு சோடி கீழ் இருக்கு.

□□□

ஆசிரியை: சரேஸ் ஏன் பள்ளிக் கூடத்திற்கு வேர்ப்பு வாறாய்?
சரேஸ்: சொறி சேர் கலவி புரோஸ் பார்த்துக் கொண்டு இருந்தனான். கொஸ்ல மல்லாம் எழும்பிட்டாங்கள்.

□□□

கைத் தொலைபேசியின் கதிர்களால் முலையாம் தாக்குதலு ஏற்பட்டு பெரும் பாதிப்பையும் ஏற்படுத்தும்.
முதலாமவன்: நீ எந்த போன் பாவிக்கிறனீ. கன்னத்து கிறுகலுக்க வாறு தெரியுதோ?
மற்றவன்: நான்கு மணிப்பாரி மனைவிக்கை.
முதலாமவன்: நீ சொல்லும் சரி. கூலை இல்லாத அக்கவுன்டு இது ஏன் பிரச்சனையில்லை.

□□□

ஆசிரியர்: இரு வசனத்தை இருந்துங்கள். "ஒரு மாதம் ஒரு பசுவை புல் மேய்ந்து"
மாணவன்: ஒரு பசுவும் ஒரு மாதம் புல் மேயுது.
ஆசிரியர்: நல் இப்படி திருத்தினன்?
மாணவன்: வெளில் போட்ட்.

□□□

ஆசிரியர்: கண்ணன். குதிரையை எழுதிப் பாடும்?
கண்ணன்: குதிரை
ஆசிரியர்: குதிரைக்கு கடைசியில் என்ன எழுத்தும்?
கண்ணன்: வால்

□□□

இப்பகுதியில் உங்களால் மற்றவர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்க முடிந்தால் அவற்றை தேசம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்து வாழும் பூமியில், ஈழத்தமிழர் தம் வெளியீட்டு முயற்சிகளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தொடர்ந்த வண்ணம் உள்ளனர். தம் எண்ணத்தில் கருக்கொண்ட விடயத்தை நூலுருவில் வெளிக்கொண்டு வரும் சுதந்திரமான சூழலில் வாழும் எம்மவர்க்கு நூல் வெளியிடுவதற்கான வெளிப்படையான பாரிய தடைகள் இல்லை. தம் அறிவுத் தேட்டத்தை மற்றவருடன் பகிர்ந்து கொள்ளவும், தாம் அறிந்த வரலாற்றை, தமது கருத்தை எதிர்காலச் சந்ததியினருக்கு ஆவணமாகப் பதிந்து வைக்கவும் மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட முயற்சிகளின் வெளிப்பாடுகள், நூல்வெளியீட்டு விழாக்கள், நூல்அறிமுக விழாக்கள் என்பனவற்றுக்கான அழைப்புக்களின் வாயிலாகவும் ஊடகங்களின் வாயிலாகவும் அறிய முடிகின்றது.

நூல்தேட்டம்

என். செல்வராஜா

தாயகத்திலிருந்த போதிலும் சரி, இன்று புலம் பெயர்ந்து வாழ்கின்ற போதிலும் சரி, ஈழத்தவரின் நூல் வெளியீட்டு முயற்சியில் காணப்படும் ஒரு பாரிய குறைபாடு வெளியீட்டுத்துறை நிறுவனப்படுத்தப்படுவதில் காணப்படும் மந்த நிலையேயாகும். பெரும்பாலும் ஈழத் தமிழ் எழுத்தாளரை ஒரு எழுத்தாளராக மாத்திரம் காண முடிவதில்லை. அவர் பெரும்பாலும் வெளியீட்டாளராகவும் காணப்படுவது துர்அதிர்ஷ்டவசமானதாகும். ஒரு நூலை எழுதுவதிலிருந்து அதை அச்சகத்தில் சேர்ப்பிப்பதுடன் நில்லாது அச்சிட்ட பிரதிகளை விநியோகித்து செலவிட்ட பணத்தின் ஒரு பங்கையாவது திருப்பி எடுத்துக்கொள்ளப் பாடுபடும் எழுத்தாளர்களே எம்மிடையே அதிகம். ஐரோப்பிய சமூகத்தில் எழுத்தாளர் எழுத்தாளராக மாத்திரம் இருப்பதால் அவரால் எழுத்துத் துறையில் முழுமையான பங்களிப்பை நல்கி மிளிர வழி ஏற்படுகின்றது. வெளியீட்டாளர், விநியோகத்தர் என்று பல்வேறு நிறுவனங்கள் எழுத்தாளரின் சுமையைக் குறைக்க அங்கே உள்ளன. எழுதுவது மட்டுமே அவர்கள் பணியாகின்றது. எங்களிடையே நூல் வெளியீட்டாளர்களோ விநியோகத்தர்களோ வர்த்தகரீதியில் இன்னமும் பிரகாசிக்காமல் இருப்பது ஏன் என்பது தனியானதொரு ஆய்வுக்குரிய அம்சமாகக் கருதுவதால் அதை இங்கே தவிர்க்க விரும்புகின்றேன்.

தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் எழுத்தாளர்கள் இன்று எதிர் நோக்கும் முக்கியமான பிரச்சினை, அவர்களது வெளியீடுகள் அவர்களைச் சார்ந்த ஒரு வட்டத்துக்குள் இருந்து வெளியேறி பரவலாக நூலாதிக்குகளிலும் அறிமுகமாக வேண்டும் என்பதேயாகும். இங்கு அவர்களைச் சார்ந்த வட்டம் என்று நாம் குறிப்பிடுவது, குறிப்பிட்ட நூலின் ஆசிரியர் அல்லது நூலின் விநியோகத்துக்குப் பொறுப்பேற்றவரின் விநியோக எல்லை என்பதையாகும். இவ்வெல்லை நூலுக்கு நூல் மாறுபடலாம் என்பது குறிப்பிடத் தக்கது. ஒரு தமிழ் எழுத்தாளரின் வெளியீட்டு முயற்சியை அறிமுகப்படுத்தும் வாய்ப்புக்களை திறந்த மனதுடன் நல்க வேண்டிய பொறுப்பு இன்று பரவலாக நாடெங்கும் வெளிவந்த வண்ணமிருக்கும் தமிழ் தகவல் ஊடகங்களுக்கு உள்ளது.

தமது சஞ்சிகையில் காலத்துக்குக் காலம் நூல் விமர்சனங்களை பிரசுரிப்பதுடன் மாத்திரம் இந்தப் பொறுப்பு நிறைவெய்தி விட்டதாகக் கருதலாகாது. அங்கொன்றும் இங்கொன்றுமாக பிரசுரமாகும் வெளியீட்டு விழாவுக்கான அழைப்புச் செய்தியுடனோ விமரிசனக் கட்டுரையுடனோ நின்று விடக்கூடியதல்ல நூல் அறிமுகப்பணி.

இன்று எம்மவர்கள் புலம் பெயர்ந்து வாழும் மண்ணில் வெளிவந்து நூற்சந்தையில் கிடைக்கக் கூடியதாக உள்ள நூல்களை, சஞ்சிகைகளை முடிந்த வரை பெற்று அவற்றை அறிமுகம் செய்யும் பணியை தேசம் இதழ் மூலம் மேற்கொள்ள விளைகின்றோம்.

எம் கைக்கு எட்டும் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தும் இங்கு அறிமுகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். நூல் தேட்டம் பகுதியில் நூல்கள் அறிமுகம் செய்யப்படுமேயன்றி அவை பற்றிய விமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...னையாள் பேரமைவில் தனிக்கவனம் பெறும். இச் சந்தர்ப்பத்தை ...ழுத்து தமிழ் நூல் வெளியீட்டாளர் சங்கமும் உரிய முறையில் பயன்படுத்தி, வெளியை வேண்டிக் கொள்வதே எமது வேண்டுகோளாகும்.

ஆறுமுகநாவலர் சைவநூற்பதிப்பு விழாவும் நூல்களின் முன்னுரை, பிரமாணம் என்ற நூல் பற்றிய தகவல்களையும் தேடி அலைவதற்கு அலுப்பு மேலிட்டால் கொப்பறேற் நூல்களை அணுகும் அதிருஷ்டத்துக்கு இயற்கையாளப்படுவதுடன் விரைவில் நாலுநூலில் வெளிவரவிருக்கும் நூல்களின் பட்டியலின் முதலாவது தொகுதியையும் சேர்த்துக் கொள்ளப்படும்.

01. வாழ்கை வரலாறு
அன்னை வழங்கை அன்னை திரேசா.

ஆசிரியர் - அமுதசாகரன்
வகை-மொழிபெயர்ப்பு புனைபெயர்-இலங்கை (முழுப்)
வெளியீடு - பூபாலசிங்கம் புத்தகசாலை, லண்டன்
முகவரிகள் - லண்டன் அலுவலகம், லண்டன்.
பிரபல விநியோகஸ்தர்கள்
Poobalasingham Book Depot (London Branch), 110 Holland Road, Eastham, E62 EP, London, United Kingdom.
1வது பதிப்பு - மே 1997. (191, 250 பக்கம். புகைப்படங்கள். விலை: ஸ்டேர்லிங் பவுண் 5.00. அளவு: 14x19.5 சமீ)

அன்னை திரேசா என்ற பெயர் உலகமெங்கும் தெரிந்த ஒன்று. ஆனால் அவரது வாழ்க்கையை இருபதாயிரம் வரிகளுக்குள் அடக்கி விடுவதென்பது சிரமமான காரியம். அவரது வாழ்க்கையை ஒரு திரைப்படமாக்கத் துணிந்தால் அதற்கான திரைக்கதை மட்டுமே ஆயிரம் பக்கங்களைத் தாண்டி விடும். அப்படியிருக்க இந்த நூலிலே மக்களிடையே உலாவிய வேளையில் வாழ்வின் விளிம்பில் நின்று வாழ்ந்த மக்களுடன் தொடர்பு கொண்டு தொண்டாற்றிய-தில் தீராத்தி கண்ட அன்னை தெரேசாவின் வாழ்வை இலகுவான அழகு நடையில் படைத்துள்ளார். இக்கதை ஒரு தனிநபரின் வாழ்வை மட்டுமன்றி ஒரு நிறுவனத்தின் வரலாறாகவும் விரிகின்றது.

02. மொழிபெயர்ப்பு: தமிழ் மொழி: சுவாமி
உலகம் பரவிய தமிழின் வேர்: கல்வி. (பகுதி 1).

ஆசிரியர் - குகஸ்ரேந்திரன்.
வெளியீடு - இராதிகம் அறக்கட்டளை, லண்டன் (Ratnam Foundation, 179, Norval Road, North Wembley, Middlesex, HA0 3SX, United Kingdom)
அச்சுப் பதிப்பு - Student Offset Services, T Nagar, Chennai 17, Tamil Nadu, India)
1வது பதிப்பு, ஜூலை 1997. 216 பக்கம்., விலை ஸ்டேர்லிங் பவுண் 5.00. அளவு: 14x21.5சமீ.

தமிழில் உள்ள 'கல்' என்ற சொல்லைப் பற்றிய விரிவான ஆய்வின் முதற்பகுதி. 'கல்' என்ற ஒரு தமிழ்ச் சொல்லுக்கும் பிறமொழிகளில் வழங்கும் சில நூறு சொற்களுக்கும் முக்கிய ஒரு முற்றிலும் சொல இரண்டிலே விரித்த விளக்கப் படுத்தும் சொற்கள் ஒன்றுக்கொன்று இச்சொல் ஒன்றே வேறும் மூலமும். ஆதல் என்பதை. ஆசிரியர் தன் விரிவான ஆய்வில் மூலம் நிரூபித்துள்ளார். ஆய்வின் தொடர்ச்சி இரண்டாம் பாகமாக வெளிவரவுள்ளது. இந்நூலின் ஆய்வாளர் சென்னை பிரஸிடென்சிக் கல்லூரி முன்னாள் பேரா. க. சுவேறுதன அவர்களும் மதிப்புரையாளர். நூலை பதிப்பித்துள்ள இராதினம் அறக்கட்டளையின் ஸ்தாபகர் திரு. இ. நித்தியானந்தன்.

03. பொது விடயங்கள். வெளியீடுகளும்
காந்தளகம் - 20 ஆண்டுகள்: 1980 முதல் 1999 வரை.

ஆசிரியர் - அன்னை கண்ணகி.
வெளியீடு - அன்னை பதிப்பகம் - காந்தளகம், 834 அண்ணாசாலை, சென்னை 600 002.
காந்தளகம் 20 ஆண்டுகள்
1வது பதிப்பு, ஜூன் 2000. 192 பக்கம், புகைப்படங்கள். அளவு: 12.5 x 18 சமீ.
அன்னை கண்ணகி

வாழ்ப்பாணம், சாவகச்சேரி, மருதனார்மடம் முன்னாவிடம். சென்னையில் கோடம்பாக்கம் நடைபாதை விருட்சமாகி நிற்கும் "காந்தளகம்" வெளியீட்டகத்தின் இருபது வருட கால வளர்ச்சியும் பதிவுகளாக்கப்பட்டுள்ளன. 1980 முதல் 1999 வரையான காலப்பகுதியில் காந்தளகம் என்ன சாதனைகளை? வளர்ந்தது? 20 ஆண்டுக் காலப் பொதுப்பணியில் எனன? எனனென்ன விளைவுகளை அவை ஏற்படுத்தின? என்ன போன்ற தேடல்களுக்கான விடை காண்பதற்கு புதிய பொருள் முயற்சியில் வெளியீடு இந்நூலாகும். வாழ்வனுபவத்தின் வாயிலாகவும் அனுபவம், அறிவுரைகள், பல பதிப்பாளர்கள், தொழில்முறைத் தொடர்புகளினால் எனப் பலவேறு தரப்பினரும் வலுப்படுத்துவதன் இங்கே ஆவணமாகியுள்ளன. காந்தளகத்தின் பதிப்பு மற்றும் அச்சு நூல்கள் 218இன் விபரமாக முற்றிடுவதும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. சில முக்கிய தமிழ் நூல்கள் வெளியீடுகள் பற்றிய தகவல், பெறுவர் கொள்ளலாம் மேலும் ஏறுவனவாக இங்கு காந்தளகம் (tamilnool.com) உருவாக்கப்பட்டு உலகெங்கும் இருந்தும் வாசிக்க அறிய முடிகிறது.

இந்நூல் அறிமுகப்பகுதியில் உங்கள் நூலையும் அறிமுகப்படுத்த விரும்பினால் அதனுடன் இரு பிரதிகளை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்
நூல்கிடைத்த பின்
THESAM
PO Box 35806
London, E11 3JX, United Kingdom

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. மொழியியல்: தமிழ் மொழி: மாநாடுகள்
தமிழும் உலகமும்.

தொகுப்பாசிரியர்-
வெ.செ.குணரத்தினம்
வெளியீடு - விஜயா பதிப்பகம்,
விஜயா இல்லம், 5,
2வது தெரு, வெங்கட்டா நகர்,
புதுச்சேரி - 605011.
அச்சுப்பதிவு - ஆர்.ஜி.கிரப்பிக்ஸ்,
77 பிள்ளையார் கோவில் தெரு,
மடுவன் கரை, கிண்டி,
சென்னை - 600032.
1வது பதிப்பு, மார்ச் 1998.
viii,148 பக்கம், புகைப்படங்கள்.
விலை: இந்திய ரூபா 50.
அளவு: 14x21.5 சமீ

1993ம் ஆண்டு ஆகஸ்ட் 12ம் திகதி முதல் 15ம் திகதி வரை ஜேர்மன் நாட்டின் புதிய தலைநகர் பேர்லின் மாநகரிலே நடந்தேறியதும் ஐரோப்பாவின் முதலாவது உலகளாவிய தமிழுறவு மாநாடு என்று கருதப்படுவதுமான தமிழுறவு மாநாட்டு ஆய்வுரைத் தொகுப்பு. இந் நூலில் மாநாடு தொடர்பான 11 பின்னிணைப்புக்களும் காணப்படு கின்றன. மாநாட்டுக்க வருகை தந்தோர் விபரம், மாநாடு இனிதே நிறைவுற உழைத்தவர்கள் விபரம், விரிவான நிகழ்ச்சி அட்டவணை, மாநாட்டின் இறுதியில் நடந்த சில சம்பவங்கள் தொடர்பாக செயற்குழு விடுத்த விளக்க அறிக்கை, உலகத் தமிழர் பண்பாட்டு மாநாட்டுக்கான ஜேர்மன் மொழி அழைப்பிதழ், முன்னூறு ஆண்டுக் கால ஜேர்மன் உறவு பற்றி மாநாட்டு அமைப்பாளரும் நூலின் தொகுப்பாளருமான வே.செ.குணரத்தினம் அவர்களின் உரையின் ஜேர்மன் மொழி வடிவம் ஆகியன அவற்றில் சிலவாகும்.

05. இலக்கியம்: தமிழ் இலக்கியம்: கவிதை
மறையாத மறுபாதி.
புகலிடத்துப் பெண்கள் கவிதைத் தொகுப்பு.

வெளியீடு - எக்ஸில்,
பிரான்ஸ்.
(Exil,
27, Rue Jean Moulin,
924000 Courbevoie,
France)
1வது பதிப்பு,
பெப்ரவரி 1993.
84பக்கம்,
அளவு 14x 21.5 சமீ.

புகலிடக்கருத்து இலக்கியம்' என்ற அமைப்பின் முதலாவது நூல். இத்தொகுப்பில் நமது குரல் (ஜேர்மனி), கண் (பிரான்ஸ்), சக்தி (நோர்வே), பெண்கள் சந்திப்பு மலர் (ஜேர்மனி), மற்றும் புகலிடத்தில் இருந்து வெளி வந்த தூண்டில், புதுமை, மனிதம், ஓசை ஆகிய சிறு சஞ்சிகைகளிலிருந்து தொகுக்கப்பெற்றுள்ள, பெண் கவி ஞர்களின் கவிதைகள் 48 உள்ளடக்கப்பட்டுள்ளன. பெரும் பான்மைக் கவிதைகள் பெண் விடுதலை சார்பான, அடி மைத்தனத்தை இனங் காணல், ஆணாதிக்க எதிர்ப்பு, சீதனம், அடிமைத்துவக் கலாச்சார எதிர்ப்பு, புதிய சூழலில் பழமையின் பலவந்தம் ஆகிய அம்சங்களை மூலக்கருவாகக் கொண்டமைந்துள்ளனவாயினும், சில கவிதைகள் புகலிடத்தில் காணப்படும் பொதுவான முரண்பாடுகளையும் ஈழத்தின் இன்னல்களையும் இனம் காட்டி நிற்கின்றன.

06. சமயம்: இந்து சமயம்: கீர்த்தனைகள்.
லண்டன் லூசியம் சிவன் கோயில் கீர்த்தனைகள்.

ஆசிரியர்
செ.நாகேந்திரன்.
வெளியீடு
மணிமேகலைப் பிரசுரம்,
சென்னை 17, தமிழ்நாடு.
அச்சுப்பதிவு
Scripts Offset,
Chennai 94,
Tamil Nadu.
52 பக்கம்,
அளவு: 12.5x18 சமீ.

இலண்டன் லூசியம் சிவன் கோவிலுக்காக இயற்றப்பெற்ற 17 கீர்த்தனைகளுடன் விநாயகர், முருகன், சக்தி, பகவான் சத்யசாய்பாபா ஆகியோர் மேற் பாடப் பெற்ற நான்கு பக்திக் கீர்த்தனைகளுமாக மொத்தம் 21 பாடல்களின் தொகுப்பு இதுவாகும். கவிஞர் நாகேந்திரன் தனது பக்திப் பாசுரங்களில் சமூக வாழ்வியல் சிந்தனை களை இணைத்துப் பாடியிருப்பது இந்நூலின் சிறப்பம்சமா கும்.

படைப்பாளிகளிற்கு
ஓர் நற்செய்தி

உங்கள் படைப்புகளை

தேசம்

வெளியிடத் தயாராக உள்ளது.

உங்கள் படைப்புகளை எமக்கு அனுப்பி வையுங்கள் மிகுதி அனைத்து வேலைகளையும் நாம் பொறுப்பேற்று உங்கள் நூலை வெளியிட்டு வைப்போம்.

THESAM
PO Box 35806
London
E11 3JX
United Kingdom

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று வெளியிடை

சயிலன் தேவிக்காகவேல்

முதல் வகுப்பு
முதல் காதல்
முதல் முதலை
முதல் சண்டை
முதல் சிறைப்பு
முதல் பிரிவு

இந்த முதல்கள் எல்லா மனிதனும் சாதாரண மனுஷனாய் இருக்கையில் இந்த முதல்களுக்காகவும் வந்த முதல் இரண்டும் ஏற்படுத்தினால் வாழ்வு உன் முடிவதற்கு பின்பு கூட இன்னுமாய் என்னை அதிக முடியாமல் நான் இருக்கவைத்த என் தோழியே.

உன்னை தொலைபேசியில் விழித்து வரும். அது கூட வைத்து நான் சொல்லும் பொய்யாகத்தானிருக்கும். ஒரு நல்லபடியாகத்தான் வருவிக்கப்பட்டால் என் வருவித்தவனின் மடியில் உன்னை அணைத்துக்கொண்டு நினைத்து பழகினேன் என்று சொல்லி விடுவதுபோல. இனி நீ இல்லை என்று நீயாய் போட்டின பின் உன்னை நான் தொலைத்து விட்டேன் என்று புரிகையில். அது இல்லையென்றும் முதல் கதைக்கு இன்னும் பாரமாகாது நான் சந்திக்கக் கூடியவாறு தெரிவாய்ப்பு அல்லது இரண்டாம் சமாதானமாகவிட்ட இருக்கலாம். அதற்கான பின் நீ எனக்கான புரிந்திவிட்ட போல முதல் வந்து என்று தேவில் நீ இப்போதெல்லாம் அதிக நேரங்களில் என்னால் நினைக்கப் படுகிறாய்.

நான் உயிரில் வந்து கலந்தாய்ப்பு நேரம் என்னை அழைத்துப்போல வந்தவரில் விட்டன முன்னவரு வெறுக்கு போதில் என்னை இருந்திவிட்டு மையமாகுவில் இருக்கத் தெளிவானை பார்ப்பதற்கென்றார்கிறேன். அவரின் நடிப்பதை என்னில் நான் விலையாடி என்னிடம் நூறு பேன்றிகேட்டும் சிறு சிறுந்ததின் சொன்னதைக் கூட பற்றி சொல்லத் தெரியாது முட்டாளைப் போல சொல்லாமல். ஆனாலும். மெதுவே பார்த்து மேதாவிகளாய் போல் பார்வையால் நெற்கோடுகளை வைத்துக்கொண்டிருக்கிறேன். எனது இந்த நாற்பதாம்நாளுக்கு உரிய. கொடுவதென்றால் அவரை உன பொலைப்பான வழிகொடுப்பு வேண்டுமென்று நூல் உனைவைத் தேடி

வரும் சென்று இரண்டு வாரங்கள் ஆகிவிட்டன் இன்னுமென் பேயனைந்தாய் மறந்தி இருக்கிறாய் என்பதை. இப்போதெல்லாம் இரு நாட்டில் என்னவோ எழுதிய இருக்கு. வெளியில் போனால் நான் முகங்களை எதிர்கொள்ள தயிரமை விடு நினைந்த நான் புத்தகங்களும் உங்கள்மை கவனை. அதை நான்கு நாங்கள் இந்த நாட்டில் வந்து இரண்டு நேரம் மனதுக்கு இரண்டு மனிதர்களாகி நீங்கள் அந்தரங்களாய் இப்படி இருக்கலாமா என்று.....

தோழியே உன்னைப் பற்றிய சிந்தனைகளின் நிமித்தமாய் எனது இரண்டாம் பார்வை ஆசிரியரிடமாக் கூட இரண்டாம் சொல்லுவார். இந்த முதல்கள் கொண்டு நினைத்தால் போட்டியிட முடிக்கக்கூடாது முன் அவிழ்க்க முடியாமல் அவதிப்படுகிறேன் என்னை நான் இன்னும் எனில் முடிக் சொல்லவில்லை.

வாசல் கதவு திறக்கும் போதெல்லாம் வெளியிலிருந்து உள்ளேவரும் குளிர் காற்று உன் மூச்சுக்காற்றை தழுவிக்கொண்டு வருவதாய் என் மனதிலிருந்து தழுவுகை இருந்தி ஒரு பாடல் என்று நான்கைந்து பாடலிலிருந்து விடுகையில் நான்கு வரை விட்டு என்பதை என்னால் அடையாளங்காண முடிந்தது. நான் அவற்றை என் நோகோடு பார்வையை பரவாக முயற்சிக்கிறேன். உள்ளே வரும் விடுகின்ற அனைத்து எல்லாம் ஒருமுறை பார்த்து விட்டு அவர் எவரிலிருந்து வரும்வரிசைகளை மேசைமேல் மெல்லிட்டு தன்னிடமும் ஏதோ சமைத்துக்கொண்டிருக்கும் அவரின் மனைவியிடம் போகின்றார்.

அவரின் மனைவி அவரிடம் கூட எனை அவரிடம் அனுப்பி வைப்பதா எனில் எனக்கு வரும் விதக் கருத்தோவும் இல்லை. அவரின் இரண்டு வயதுக்கு சேரும் நான் ஒருவர் கொண்ட விரும் பிரி அவரிடமில்லை கொடுக்கவும் இருந்தாலும் அவரு மாதவரிடம் கொண்டுவரும் சொல்லுவார்கள்.

நான் வைத்தியரோடான விடுமுறை அடைந்த கிட்டவரைக் எனோடு கலந்திருப்பதாக வாங்கி எடுத்து எனில் இருக்கப்பட்டு அந்த அம்மா எனைக் கூட்டுக் கூப்பிக்கொண்டு போனால் மிகவோமா என்று போல் நான் இருந்திருக்க வேண்டும் அவரு விடுத்து கலக்குள் வரு ஒரு பெரிய வாசல் நான் ஓடியோ அல்ல..... அக்கா... இதுவா பெரியதாய் போலத்தானிருக்கு அதுவ பெரியதும் இருப்பான.. என்று பார்த்துவிட்டதுக்கு கோவம் அவளின் வாயடைக்கவும் போலும் பிரான. எந்த பெரியதைப் போல என்று அவ எல்லாம் திரும்பிக்கொண்டு போது நான் பதில் சொல்ல முடியாமல முழிக்கொண்டாவே நின்ற போது அவ எல்லாம் பற்றி பேசும் நான் எவளவுதூரம் கவிழ்ந்துவிட போனேன். எல்லாம் கோவப்பட்டவை அல்லது பிரதாபம் எனை தெரியாது கடையில். இருந்து விடு வரை விடுக்கு வந்து இந்த நேரம் வரை அவ இருவரையில் எல்லாம் எதுவும் கதைக்கவில்லை என்பது என் மனதுக்கு பெரிதாகத்தானிருக்கின்றது. எல்லாவற்றிற்கும் காரணம் நீயும் நீ எல்லாம் ஏற்படுத்தவிட்டுவிட்டாய் அதை முதல்களும் உனை தனிமைப்படுத்தானிருக்குமென்றே நான் நினைக்கின்றேன்.

எனைப்பற்றி அறியாமல் வேலைக்கு விட்ட பதிரிகையை எடுத்து புரட்டினேன். ஏதேதோ செய்திகள் மனமும் என் கவனத்துக்குள் வாதபடி உள் நினைவு மறைந்திருந்து. நினைத்து பார்க்கின்றேன்.

கொழும்பிலிருந்து நீயும் நானும் சிலபேரு விரோதத்தில் முகவரம் ஏறுபயந்திருந்தோம். நீயும் நானும் அரிய முன்னின் அறிமுகம் இல்லாதவர்கள். தூதுவனாய் காரணமாய் உனக்கும் எனக்கும் பிரோதத்தில் பங்கு படுத்து இருக்கையிலே இல்லை. வெறும் விமானம் பறக்கத் தொடங்கி கலந்தாய்ப்பு நான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரோடொருவர் பேசாமலேயே இருக்கின்றோம்.

விமானம் பறக்கின்றதா நிற்கின்றதா ஆடுகின்றதா அசைகின்றதா என்பதையெல்லாம் அறியமுடியாத நிலைக்கு சமச்சீர் நிலைக்கு என் மனநிலை இசைவாக்கம் அடைந்து விட்ட வேளையில் என்னையும் அறியாமல் நித்திரையாகிப் போன நான் திடீரென கண்விழித்து சட்டையை தடவிக்கொண்டு எழும்பிய என்னை நீ தடுத்து இருக்கையில் இருக்கச் சொல்லி விட்டு என்ன விசயம் என்று என்னிடம் கேட்கிறாய்.

வாகனம் நிறுத்தப்பட்டிருக்கின்றது இறங்கி ஆமிக் காரரிடம் ஐடென்ரி கார்ட் காட்ட வேண்டுமென்று சொல்லுகிறேன்

நான் சொன்னதைக் கேட்டு நீ சிரிக்கவில்லை. நீங்கள் "இப்போது விமானத்தில் பயணம் செய்து கொண்டிருக்கிறியள் தெரியுமோ" என்று கேட்டாய். அப்போது தான் நான் நித்திரைபிலிருந்து என்னை விடுவித்துக் கொள்ளுகின்றேன்.

"என்ன நாட்டுல கனதரம் ஆமிக்காரரிடம் ஐடென்ரி கார்ட் காட்டியிருக்கிறியள் போல" என்று நீ கேட்டு நம்நாட்டின் வாழ்வியல் தன்மை நமக்குள் ஆழப்பதியப்பட்டு விட்டதை நினைத்து நாம் இருவரும் பேசிக்கொள்ளுகிறோம்.

சிங்கப்பூர் போய் இறங்கியதும் நம்மை வந்து அழைத்து சென்றவன் நம் இருவரையும் ஒரே ஹோட்டலில் தான் தங்க வைக்கின்றான். ஏஜென்சிக்காரன் காசிலேயே நாம் இருவரும் சிங்கப்பூரை சுத்திப் பார்க்கின்றோம் என்று நான் உன்னிடம் சொன்னபோது இல்லை அது நாம் அவனுக்கு கொடுத்த காசும் கொடுக்கப்போகும் காசும் என்று நீ சொல்லிச் சிரிக்கின்றாய். உனக்கும் எவருமில்லை. எனக்கும் எவருமில்லை என்ற சந்தர்ப்பத்தால் நாம் இருவரும் நண்பர்களாக பழக நிர்ப்பந்திக்கப்பட்டு விட்டோம்.

உழைப்பில்லாத வரவு வரவில்லாத செலவு போல் நாம் இருவரும் சிங்கப்பூரில் சுற்றித்திரிந்த ஒரு வாரத்தின் பின்பு திடீரென நம் இருவரையும் விமானத்தில் ஏற்றிவிடுகிறான் ஏஜென்சிக்காரன்.

மொஸ்கோவில் போய் இறங்கிய இருவரையும் கூட்டிச்சென்ற ஒருவன் நம்மை ஒரு வீட்டுக்குள் அழைத்துச் செல்லுகிறான். இந்த வீட்டுக்குள்ளேயே இருக்க வேணுமென்றும் வெளியில் சென்று ஏதாவது நடந்தால் அதற்கு பின்பு நாங்கள் பொறுப்பில்லை என்றும் வேளைக்கு சாப்பாடு வரும் சாப்பிட்டுக்கொண்டு இருங்கள் என்று உள்ளே விட்டு கதவை பூட்டிவிட்டு செல்ல நாம் இருவரும் உள்ளே சென்று பார்த்தால் அங்கு நம்மைப்போல் இன்னும் பலபேர் அடைக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

ஒருமாதம் இருமாதமாக அடைக்கப்பட்டிருப்பதாக அவர்கள் சொன்னதைக் கேட்டு நீ பயந்தாய். உனக்கு நான் தான் ஆறுதல் சொன்னேன். அந்த வீட்டுக்குள் அடைக்கப்பட்டிருந்த மூன்று வாரத்துக்குள்ளும் நாம் நல்ல சினேகிதர்களாயிருந்தோம். இரவில் அந்த வீட்டுக்குள் நடமாடும் போதெல்லாம் என் கையைப் பிடித்துக்கொண்டு தான் நீ நடப்பாய். எல்லோரும் தூங்கிய பின்பும் நீயும் நானும் சுவரில் தலைசாய்த்துக் கொண்டு மெதுவாக ரகசியம் பேசுவதுபோல் கனநேரமாய் கதைத்திருப்போம். நம்மையும் அறியாமல் நம் கண்கள் சோர்ந்து நாம் நித்திரையாகி விட நான் திடீரென கண்விழித்துப் பார்ப்பேன். நீ என் மடியில் படுத்திருப்பாய். என் சின்னத் தங்கை என் மடியில் தூங்கிய ஞாபகம் வரும் எனக்கு. உன் நித்திரையை கலைக்க விரும்பாத நான் உன்னை அப்படியே தூங்க விட்டு விட்டு நான் மட்டும் சுவரில் சாய்ந்து கொண்டிருப்பேன்.

ஒருநாள் இரவு கதவை தட்டிய சிலர் நம்மையெல்லாம் ஒரு வேனில் ஏற்றிக் கொண்டு போய் இன்னும் பல வீடுகளில் அடைக்கப்பட்டிருந்த பலரையும் அதே வேனில் ஏற்றி அடைத்துக் கொண்டு சென்றார்கள். ஒருகாலத்தில் எங்கள் ஊரில் இப்படித்தான் நாய்களை ஏற்றிக்கொண்டு போவார்கள் என்று நான் சொன்னபோது அப்படியெல்லாம் நடந்தது தனக்குத் தெரியாதென்றும் இப்போதெல்லாம் எங்கள் ஊரில் பிள்ளைகளைத்தான் பிடித்து வேனில் ஏற்றிக்கொண்டு போவார்கள் என்று நீ சொன்னபோது உனக்கும் எனக்கும் உள்ள வயது வித்தியாசமும் நம்மிருவருக்குமிடையில் இருந்த வாழ்க்கை வேறுபாடும் என்ன என்பதை அந்த நேரத்தில் தான் தெரிந்து கொண்டேன்.

உக்ரேன் என்ற இடத்துக்கு நாம் கொண்டு வரப்படுகிறோம் அதற்கிடையில் அந்த வேனுக்குள் அடைக்கப்பட்டிருந்த நாம் பட்ட கஸ்ரங்கள் கொஞ்சமல்ல. கூட்டி வந்தவர்களும் தமிழர்கள் தான் என்றாலும் அவர்களும் அண்ணியர்கள் போல்தான் நடந்தார்கள்.

உக்ரேன் என்ற இடத்துக்கு நம்மை கூட்டிவந்த அவர்கள் நம்மையெல்லாம் அடிமைகளை கையளிப்பது போல் ஒரு கூட்டத்திடம் ஒப்படைத்து விட்டு நம்மை பொறுப்பேற்றுக் கொண்டவர்களிடம் ஏதோ நமக்கெல்லாம் புரியாத பாசையில் பேசிவிட்டு சென்று விட்டார்கள்.

இதுவரையில் எந்த திரைப்படத்திலுமோ கதைகளிலுமோ கண்டிராத தோற்றத்தைக் கொண்ட அவர்களைக் கண்ட நீ வெளிநாட்டு பயணம் என்ற பெயரில் நாமெல்லாம் அடிமைகளாக விற்கப்பட்டு விட்டோமோ என்று பயந்து கொண்டு என்னிடத்தில் சொன்னதை கவனித்த ஒருவன் எதுவும் கதையாதே என்ற சைகையுடன் கையில் உள்ள கூரான ஆயுதமொன்றை ஓங்கிக் கொண்டு ஓடிவர நீபயந்து கொண்டு என் நெஞ்சில் சரிந்து மறைந்து கொண்டாய்.

நம்மையெல்லாம் கூட்டிச்சென்றவர்கள் அந்த நேரத்தில் இருந்து அடுத்தநாள் இரவு வரை ஒரு வீட்டில் அடைத்து வைத்திருந்தார்கள். பகல் முழுவதும் குடிக்கத் தண்ணீர் கூடத் தரவில்லை. அன்றிரவு ஆடுமாடுகளை தட்டியெழுப்புவது போல் நம்மையெல்லாம் தட்டியெழுப்பி நடக்கச் சொன்னார்கள். நீ என் கையை பிடித்துக் கொண்டே வருகிறாய். நம்மை ஒருவரோடு ஒருவர் கதைக்கக் கூடாது என்று சொன்னதால் மௌனமாகவே நடந்து வருகிறோம்.

விடியப்போகிறதென்று தெரிகின்ற வேளையில் அது எந்த இடமாக இருந்தாலும் நம் நடைப்பயணம் நிறுத்தப்படுகின்றது. அந்த இடத்தில் ஒரு மலை இடுக்குகள் இருந்தாலோ அல்லது குகை இருந்தாலோ அதற்குள் நாம் புகுத்தப்பட்டு பகல் முழுவதும் காவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிப் பிரிகின்றோம்.

இடையே நான்கு நாட்கள் மழை பதுங்குகுழி இரவு பயணமாய் நகர்கின்றது. ஒவ்வொரு பகலும் ஒருசிறு போட்டகத்தைத் தரையோடு தரையாய் நாம் எல்லோரும் படுத்து தின்று தடிகளச் சொல்லி நிரப்புக்கும் பறிகிறோம். இதற்கிடையில் நானும் நிழலும் ஒருவரி ஒருவர் பேசிகொள்ளுகின்றோம் என்று சொல்ல நாம் இருவரையும் இரவில் ஒன்றாக வைகோர்த்து படுக்கமுடியாமல் பிரித்த விடுகிறார்கள். இடையெல்லாம் மழை மட்டும் நான உன்னைக் காணுகின்றேன்.

நம்மோடு வருபவர்களில் ஒருவனைக் காணவில்லை. மனம் எங்கே எனத் மன பக்கத்தில் இருப்பவனிடம் ரகசியமாகக் கேட்கிறேன். இரவு முழுது பெய்துகொண்டிருக்கும் பனியில் மயங்கி விழுந்தவனை அப்படியே விட்டு விட்டு நடந்து விடுவார்கள் என்றும் அவன் சொன்ன போது நான் உறைந்து போகின்றேன்.

ஏறுபடாத நான் பகலில் ந ன் நாடுகளையே ந ...ருவதற்கு அஞ்சுகின்றேன். விடைகின்றது. எனக்கு விடைந்து ஒரே பிடி உணவையும் சொற்ப தண்ணீரையும் உனக்கே தருகிறேன். மறுபேதம் சொல்லாமல் வாங்கிக் கொண்ட நீ என்னையே பார்க்கின்றாய். உன் தலைக்கவசத்து சேற்றை சாயம் பூசிய போல நிறம் மாறி முழு பழுத்த பேயாகின்றது. ந ன் மண்ணும் கண்களின் வரைபகளும் கலந்து ந தியை வெறுத்தபோல இருக்கின்றது. சிங்கப்பூரில் நீ எண்ணெய் திரிந்த போது உன்னிடம் இருந்த போலிவு மறைந்து பார்க்க பரவாயி இருக்கின்றாய். ந ன்னை நிமிரவது பார்க்கின்றேன். என்னைப் பார்த்து உன் கண்களில் நீ நீரலைகள் தேங்கி நிற்கின்றது. ந ன் கரதை இழக்கப் பிறக்கின்றேன். உடல் ந தியில் முழுகினாலது. பகல் முழுவதும் உனது அருகிலேயே இருந்தேன் நீ தூங்கி ன் தோளில் சாய்ந்தாய்.

இரவாகும் பொழுது நம்மை எழுப்பி நடக்கச் சொல்லுகின்றார்கள். உன்னையும் என்னையும் பிரிந்து நடக்கச் சொல்லுகின்றார்கள். இருட்டில் ஆழ்ந்த ஈரத்தில் மேலும் ஏறி நடக்கின்றோம். யார் முன்னால் யார் பின்னால் நடக்கின்றோம் என்று தெரியாமல் நடந்து கொண்டிருந்த போது அம்மா... என்று உன அலறல் பின்னாலிருந்து கேட்டு நாங்கள் எல்லோரும் நடப்பதை நிறுத்தினோம். இருட்டில் நடை பிணத்து தனக்குள் நீ வெளிச்சம் பாய்ச்சி பார்க்கிறார்கள். நீ சிறு விழுந்து கிடக்கின்றாய். நான் ஓடிவந்து ந ன்னைத் தூக்க முயற்சிக்கின்றேன். என்னைக் கண்டதும் எட்டி உதைக்கின்றாய். ஒருவன் நான உள்ளி விழுகின்றேன். நீ அம்மா... அம்மா... என்று அலறுகின்றாய். பார்க்க முடியாமல் வயிறோடு விழுந்து கிடக்கும் பாட்டை வானை முறுக்கி எழுப்பி நடக்கச் சொன்னது போல உன்னை எழுப்பி நடக்கச் சொல்லி சுமல் உதைக்கின்றார்கள் நீ எழுந்தவிலலை. மயில் இருந்து சூடுத்தால் ந ன்னை குத்துகின்றார்கள். நீ மீண்டும் அம்மா... அம்மா ... என்று ரனவேலுந்தில் அழுகின்றாய். அவர்கள் தாகமும்புவிலேயே ஏதோ பேசிக் கொண்டிருக்கின்றார்கள். நான் முழுவது உன் முதுகை எடுத்து என நெஞ்சோடு அணைத்து கொள்ளுகின்றேன்.



கடந்த ஆண்டு 12,600 இலங்கையர்கள் ஐரோப்பாவிற்கு புலம் பெயர்ந்து ந ள்ளனர். பிரதானமாக மட்டும் 6,040 தஞ்ச விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு ந ள்ளது. ந ண்மையில் தஞ்சமடைந்த மக்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அல்லாமல் தனித் தனி நாடுகளாக இதைவிடவும் மிக ஆபரங்கள் அதிகமாக இருப்பதாகவும் என தெரிவிக்கப்படுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் மேற்கு ஐரோப்பாவிற்கு முன்னம் கோரி பயணம் மேற்கொண்டவர்களில் 2,000 பேர் ஐரோப்பிய எல்லைகளில் இறந்து உள்ளனர்.

2000 - ஆரம்பத்தில் வவுனியாவில் இருந்து புலம்பெயர்ந்த 24 இலங்கைத் தமிழர்களில் ஒருவர் மட்டும் உயிர் தாகத்தி இருந்தார். இறந்தவர்களை பையில் கொண்டு சென்றவர்களை மனிதர்தான் பொலிசார் வைது செய்தனர்.

2000 - ஜூலையில் பெல் ஜியாசின தலைநகர் ப்ரசுலேயில் பயன்படுத்திய ரிலையில் மி கண்டெய்னர் 5 இலங்கைத் தமிழர்களும் மேலும் ஒளிபினால் ஏற்படும் Firsthite இனால் தாக்கப்பட்டனர். பின்னர் சிகிச்சையின் போது இவர்களது அவயங்கள் துண்டிக்கப்பட வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது.

? கடலில் நடந்த தரும் கோர பயணங்கள் ? தாயகத்தில் பயணம் செய்த விமானம் தெரியாமல் கடலில் சுழற்சியில் வழமும் நிறைகள்.

1996 - நத்தார் தினத்தன்று இத்தாலிய கடலில் நிகழ்ந்த படகு விபத்தில் பல நாடுகளைச் சேர்ந்த 280 அகதிகள் பரிதாபமாக இறந்தனர். அவர்களில் 78 பேர் இலங்கையர்.

இன்னும் நூற்றுக் கணக்கான தமிழர்கள் இலங்கையிலிருந்தும் தாய்நாடுகளிலிருந்தும் புலம் பெயர்வதை நாம் பிரிந்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பேசிமுடித்து தங்களுக்குள்ளேயே முடிவெடுத்து விட்டு எங்களையெல்லாம் மீண்டும் நடையை தொடரும்படி சொல்லுகின்றார்கள். நான் அவர்களை அண்ணாந்து பார்க்கின்றேன். என்னை எழும்பி போகும்படி சொல்லி எனக்கு உதைக்கின்றார்கள். உன்னை தூக்கிக்கொண்டு போகிறேன் என்று அவர்களிடம் சைகையால் கெஞ்சுகிறேன். இல்லையென்று சொல்லி என்னை அடிக்கின்றார்கள்.

பேசாமல் வா. இல்லையெண்டால் அடிச்சுச் சாக்காட்டிப் போடுவாங்கள்.... என்று நம்மோடு வந்தவன் ஒருவன் என் காதில் குனிந்து சொல்கின்றான்.

நான் உன்னை இறுக அணைத்து என் நெஞ்சோடு சேர்த்து உன் நெற்றியில் ஒரு முத்தம் கொடுத்து விட்டு மெதுவாக உன் தலையை நிலத்தில் கிடத்தி விட்டு எழும்பி நடக்கத் தொடங்குகின்றேன்.

அம்மா... அம்மா... என்ற உன் அனுங்கல் குரல் கேட்கின்றது. நடக்கின்றேன் உனக்கும் எனக்கும் இடையில் ஏற்படும் தூரத்தின் அளவை காற்றுவெளியிடை மிதந்து வரும் அம்மா.... அம்மா... என்ற அனுங்கல் குரல் நிர்ணயிக்கின்றன. இருட்டினில் நடக்கின்றேன்.... நடக்கின்றேன். உன் குரல் என் காதுகளிலிருந்து தூரமாகி விட்டது.

தோழியே! உன்நினைவுகளுடனேயே பத்திரிகையைப் புரட்டிய என் கண்கள் ஒருபக்கத்தின் மூலையில் முப்பத்தியோராம் நாள் நினைவஞ்சலி என்ற எழுத்துக்களின் கீழ் உன் புகைப்படம் இருப்பதைக் கண்டு நிலைகுத்தி நிற்கின்றது.

உயிர்கள் எல்லாமே ஒன்றுதான் என்ற நிலையிலும் சிலரின் சாவுகள் மட்டும் சரித்திரமாகின்றன. உன் போன்றவர்களின் சாவுகளோ வெறும் சம்பவங்களாக மறுக்கப்படுகின்றன. ஆனால் என்னால் மட்டும் உன் மறைவை ஒரு சம்பவமாக மட்டும் நினைக்க முடியவில்லை. ஏனெனில் முதல் வகுப்பு.. முதல் காதல்.. முதல் முத்தம்.. முதல் காயம்.. முதல் சந்திப்பு.. முதல் பிரிவு... இந்த முதல்கள் எவர் மனதிலும் எப்போதும் மறையாமல் இருக்குமாயின் இந்த முதல்களும் வந்த முதல்.. ஐ என்னுள் ஏற்படுத்தினாய் என்று உன் மறைவுக்கு பின்பு கூட என்னால் அறிய முடியாமல் தான் இருக்கின்றது.

எனக்குள் நீ ஏற்படுத்தி விட்டுப் போன அந்த முதல்களும் ஒன்றையேனும் அறிந்து கொள்ளும் தேடலின் நிமித்தமாக நான் மீண்டும் என் பார்வையை ஜேர்கோட்டில் நிறுத்தி வெறித்துப் பார்க்கத் தொடங்குகின்றேன்.

வீட்டுக்கார அண்ணர் இனி தன் மனைவியுடன் வரக்கூடும் என் கண்கள் கலங்கியிருப்பதன் காரணம் என்ன என்று என்னிடம் கேட்கக்கூடும். நானும் உன்னைப்பற்றிய எல்லாச் செய்திகளையும் சொல்லக்கூடும். என்னோடு சேர்ந்து அவர்களும் கண்கலங்கக்கூடும். அதன் பின்பு அவர்கள் எல்லோரும் சாப்பிட்டு விட்டு தூங்கிவிடக் கூடும். ஆனால் நான் மட்டும் என் ஜேர்கோட்டு பார்வையின் இடை நிறுத்தத்திலிருந்து மீண்டும் தொடர்வேன். காற்றுவெளியிடையில் காணாமல் போன நீ என்னுள் ஏற்படுத்தி விட்டுப் போன அது என்ன என்ற ஆராய்ச்சியில் ஈடுபடும் மேதாவியைப் போல..... □□

இன்றே செய்யுங்கள்

தொடர்ந்தும் தேசம் தன்னை வெளிக் கொண்டுவர உங்கள் ஆதரவு இன்றியமையாதது. உங்கள் விமர்சனங்களையும் ஆக்கங்களையும் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

உங்கள் விருப்பப்படி தேசம் தன் பிரதிகளை உங்களிற்கு அனுப்பி வைக்கத் தயாராக உள்ளது. அடுத்து வரும் ஆறு இதழ்களிற்கான சந்தா £10 ஐ அனுப்பி வைப்பதன் மூலம் தேசத்தை உங்கள் இல்லங்களிற்கே வரவழைக்க முடியும்.

சந்தாதாரர் ஆக விரும்புவோர் பின்வரும் விபரங்களை எமக்கு எழுதி அனுப்பவும்.

Title
Initial
Name
Address

£10 ற்கான காசோலையையும் இணைக்கவும்.
காசோலையை (பிரித்தானியா)
THESAM
என்ற பெயரிற்கு வரையவும்.

உங்கள் ஆதரவிற்கு நன்றி

THESAM
PO Box 35806
E11 3JX
London

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காப்புக் கலைகள்

குழந்தைகளை ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடையவர்கள் ஆக்கும்.

(தற்காப்புக் கலைக் கல்லூரி □ அதிபர் : இரவீந்திரன் □ 020 8472 0376)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org